# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு
## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் : 2 ஜூன் 2021 விருந்து : 9



தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

தமிழ்த்துறை - சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
நற்றமிழ்க்குடில்

# நற்றமிழ்க்குடில்

## தமிழால் தழைக்கும் உலகு

## மாணவ இலக்கிய மின்னிதழ்

குடில் : 2 ஜூன் 2021 விருந்து : 9



## தமிழ்த்துறை

சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

# நற்றமிழ்க்குடில்

ஆசிரியர் குழு : அ. ஸ்டெல்லாமேரி
முதுகலைத்தமிழ், முதலாமாண்டு

ஜெ. நிஷாந்தி
இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

மு. ரம்யா, கி. நந்தினி
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

ரா. பிரியதர்ஷினி
இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு

ஆலோசனைக்குழு : டாக்டர் சேது குமணன்
கல்லூரித் தலைவர்

முனைவர் ம. சம்ஷாத்
கல்லூரி முதல்வர்

முனைவர் சே. கண்மணி
தமிழ்த்துறைத் தலைவர்

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்

வெளியீடு : தமிழ்த்துறை
சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு
சோகா இகெதா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி
சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம்,
சென்னை 600 099.

Blog : sokatamil blogspot.com
Facebook : Soka Tamil Avai

# நற்றமிழ்க்குடில்

**மாணவ இலக்கிய மின்னிதழ்**

**குடில் 2**

**விருந்து 9**

**தமிழ்த்துறை**

**சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு**

**ஜூன் 2021**

# உள்ளே.......


தலையங்கம்

அறிவோம் அறிஞுரை

மலரே

கட்டுரைகள்

பழமொழி நுண்பொருள்

நூல் நயம் பாராட்டல்

கவிதைகள்

அறிவியல் செய்திகள்

உணவே மருந்து

விடுகதைகள்

பண்டிகைகள் வரலாறு

சொல் விளையாட்டு

பொன்மொழிகள்

கடித இலக்கியம்

சிறுகதை


தூரிகைத் தூரல்கள்

தகவல் களஞ்சியம்

முன்னாள் முத்துகள்

## தலையங்கம்

# கொரோனா இரண்டாம் அலை



கோவிட் - 19 என்று அழைக்கப்படும் கொரோனா வைரஸ் **“தீநுண்மி”** காரணமாக ஏற்படும் தொற்றாகும். இது கொரோனா வைரஸ் பெருந்தொற்று என்று அழைக்கப்படுகிறது. இந்நோயின் தொற்று முதன் முதலில் சீனாவின் **உகானி**ல் 2019ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அடையாளம் காணப்பட்டது. 30.01.2020இல் கோவிட் - 19 தொற்றை உலக அளவில் பொது சுகாதார அவசர நிலையாகவும் மார்ச் 11இல் ஒரு பெருந்தொற்றாகவும் உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. 21 மே 2021 அன்றைய நிலவரப்படி 188 நாடுகளில் 16,52,53,588 பேர் பாதிக்கப்பட்டனர். இவர்களுள் 34,25,648 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நோய்த்தொற்று உலகளாவிய சமூக மற்றும் பொருளாதார சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா அச்சம் காரணமாக முகக்கவசம், கிருமிநாசினி, உள்ளிட்ட பொருட்களை அதிக மக்கள் வாங்கியதால் விநியோகப் பற்றாக்குறை ஏற்பட்டது. ஊரடங்கால் மாசுபடுத்திகள் மற்றும் பசுமைக்குடில் வாயுக்கள் ஆகியவற்றின் வெளிப்பாடு குறைந்துபோனது. 177 நாடுகளில் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் மூடப்பட்டன. இது உலக மாணவர் தொகையில் சுமார் 98.6 விழுக்காட்டினரைப் பாதித்துள்ளது.

- கொரோனா முதல் அலையில் 12 வயதுக்குட்பட்டோர் மட்டும் 3.8 விழுக்காடு அளவில் தொற்றுக்கு ஆளாகினர். இரண்டாவது அலையில் 3.4 விழுக்காட்டினர் தொற்றால் பாதிக்கப்பட்டனர்.
- முதல் அலையில் 60 வயதுக்கு மேற்பட்டோர் 13.1 விழுக்காடு பாதிக்கப்பட்ட நிலையில், இரண்டாவது அலையில் 14.4 விழுக்காடு மக்கள் நோய்த்தொற்றுக்கு ஆளாகினர்.
- பெண்களைப் பொறுத்தவரை முதல் அலையில் 60 வயதுக்கு மேற்பட்டோர் 25.7 விழுக்காடு பாதிக்கப்பட்டனர். இது இரண்டாவது அலையில் 31.5 விழுக்காடு எனப் பாதிப்பை உயர்த்தியது.

- 50 வயது முதல் 60 வயதுக்குட்பட்டோர் முதல் அலையில் 27.5 விழுக்காடு பாதிக்கப்பட்டுத் துன்புற்ற போது, இரண்டாவது அலையில் 40.8 விழுக்காட்டினர் தொற்றுக்கு ஆளாகினர்.
- 41 வயது முதல் 50 வயதுள்ள பெண்கள் முதல் அலையில் 29.4 விழுக்காடும் இரண்டாவது அலையில் 33.3 விழுக்காடும் பாதிக்கப்பட்டனர்.
- 31 வயது முதல் 40 வயதுள்ள பிரிவினர் முதல் அலையில் 33 விழுக்காடு தொற்றுக்கு ஆளாகினர். இரண்டாவது அலையில் 19.9 விழுக்காடு பாதிக்கப்பட்டனர்.
- 20 வயதுள்ளவர்கள் முதல் அலையில் 38 விழுக்காடு தொற்றுக்கு ஆளாகிய நிலையில் இரண்டாவது அலையில் இது குறைந்து 35.9 விழுக்காடாகச் சரிந்துள்ளது. இவ்வாறு பெருந்தொற்றின் பாதிப்பு நாள்தோறும் கூடியும் குறைந்தும் காணப்பெறுகிறது.

**நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல் - குறள் 948**

என திருவள்ளுவர் கூற்று இங்கு நோக்கத்தக்கது. நோய் இன்னதென்று ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும் படியான மருத்துவ முறைகளைக் கையாண்டு நல்வாழ்வை வாழ வழிவகை செய்ய வேண்டும் என்பதை இக்குறள் அறிவுறுத்தி நிற்கிறது.

கோவாக்சின், கோவிசீல்டு போன்ற தடுப்பூசிகள் இந்தியாவில் போடப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் தடுப்பூசிகளைப் போட்டுக்கொள்ள முன்வர வேண்டும். மூன்றாம் அலையைத் தடுக்க, கொரோனாவை ஒழிக்க, தடுப்பூசி செலுத்திக் கொள்வதே சிறந்த வழி.

**தனிமனித இடைவெளியைப்**
**பின்பற்றுவோம்!!!**
**விலகி இருந்து விரட்டியடிப்போம்**
**பெருந்தொற்றை!!!**
**கொரோனாவை அழித்தொழித்து மகிழ்ச்சியான**
**எதிர்காலத்தை மீட்டெடுப்போம் !!!**


அ. ஸ்டெல்லாமேரி
முதுகலைத்தமிழ், முதலாமாண்டு

# அறிவோம் அறிஞரை

## கி. ராஜநாராயணன்

கி.ரா என்று சுருக்கமாக அழைக்கப்படும் கி. ராஜநாராயணன் கரிசல் இயக்கத்தின் தந்தை என்று கருதப்படுகின்றவர்.

திருநெல்வேலி மாவட்டம் (தற்போது தூத்துக்குடி மாவட்டம்)கோவில்பட்டிக்கு அருகில் உள்ள இடைசெவல் கிராமத்தில் பிறந்தவர். வட்டார இலக்கியத்தின் முன்னத்தி ஏர், தலைச்சிறந்த கதைசொல்லி, கரிசல் இலக்கியத்தின் பிதாமகன் எனப் போற்றப்பட்ட கி.ரா கரிசல்காட்டு மண்ணையும் பண்பாட்டையும் காவியமாக்கியப் பெருமைக்குரியவர்.




| | | |
|---|---|---|
| பெயர் | : | கி. ராஜநாராயணன் |
| இயற்பெயர் | : | ராயங்குல ஸ்ரீ கிருஷ்ண ராஜநாராயணப் பெருமாள் ராமானுஜ நாயக்கர் |
| பிறப்பு | : | 16 செப்டம்பர் 1922 |
| பெற்றோர் | : | ஸ்ரீ கிருஷ்ண ராமானுஜம், லட்சுமி அம்மாள் |
| துணைவி | : | கணபதி அம்மாள் |
| இறப்பு | : | 17 மே 2021 |
| புனைப்பெயர் | : | கி.ரா. |
| நாடு | : | இந்தியா |
| இலக்கிய வகைகள் | : | சிறுகதை, புதினம், அகராதி, கட்டுரை, குறுநாவல் |

கரிசல் வட்டார வழக்கு அகராதியையும் கன்னிமை, மின்னல், கோமதி, நிலை நிறுத்தல், கதவு, பேதை, ஜீவன், நெருப்பு, விளைவு, பாரதமாதா, கண்ணீர், வேட்டி, கரிசல் கதைகள், கி.ரா பக்கங்கள், கிராமிய விளையாட்டுகள், கிராமியக் கதைகள், குழந்தைப்பருவக் கதைகள், கொத்தைபருத்தி, புதுவை வட்டார நாட்டுப்புறக் கதைகள், பெண் கதைகள், பெண் மணம், வயது வந்தவர்களுக்கு மட்டும், கதை சொல்லி, மாயமான் போன்ற சிறுகதைகளும் கிடை, பிஞ்சுகள் ஆகிய குறுநாவல்களும் கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள், அந்தமான் நாயக்கர் எனும் புதினங்களும் ருஷ்ய மண்ணின் நிறம் என்ன?, புதுமைப்பித்தன், மாமலை ஜீவா, இசை மகா சமுத்திரம், அழிந்து போன நந்தவனங்கள், கரிசல் காட்டுக் கடுதாசி ஆகிய கட்டுரைகளையும் நாட்டுப்புறக் கதைக்களஞ்சியத் தொகுதியையும் படைத்துள்ளார்.

கி.ராவின் **கிடை** புதினம் **ஒருத்தி** என்ற பெயரில் திரைப்படமாக்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் விருது, இலக்கிய சிந்தனை விருது, சாகித்திய அகாதமி விருது, மா.சிதம்பரம் விருது, கனடா தமிழ் இலக்கிய தோட்டம் இலக்கிய சாதனை விருது, மனோன்மணியம் சுந்தரனார் விருது, உ.வே.சா விருது ஆகிய விருகளைப் பெற்றுள்ளார்.

கி.ராவின் முதல் கதை **மாயமான்** 1958இல் சரஸ்வதி இதழில் வெளியானது. கி. ராஜநாராயணன் விவசாயி, கதை சொல்லி ஆவார். ஏழாம் வகுப்பு வரை படித்தவர். **நான் மழைக்குத்தான் பள்ளிக்கூடம் ஒதுங்கியவன். பள்ளிக்கூடத்தைப் பார்க்காமல் மழையைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டேன்** என்று தன்னைப் பற்றிச் சொல்லுவார். பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

கி.ரா தனது இறுதி காலத்தில் புதுச்சேரியில் வாழ்ந்தார். பல விருதுகளுக்குச் சொந்தக்காரரும் மக்கள் படைப்பாளியாக விளங்கியவருமான கி.ரா அவர்கள் 2021ஆம் ஆண்டு மே திங்கள் 17ஆம் நாள் தனது 99 வயதில் இயற்கை எய்தினார்.

**ரா. அஞ்சனா**

**கணினி அறிவியல், முதலாமாண்டு**

# மலரே…….




கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் 72ஆவது இடத்தைப்பெறும் மலர் பிடவம். இம்மலரின் தன்மைகளைச் சங்கப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

கார்காலத்தில் பொழியும் முதல் மழையின் போது கொத்தாகப் பூத்துக் குலுங்கும் இம்மலர், அடுத்த நாளே உதிர்ந்து போகும் தன்மையை உடையது. பிடவம் ஒரு வாரம் காலம் மட்டுமே பூக்கும்.

இம்மலர் மாலையில் வானத்தில் மேக மூட்டத்தில் நனைந்து மலரும். கூர் நுனிக் கொண்ட களாக்காய் காய்க்கும் போது பிடவம் மலர் மலரும். இலை இல்லாமல் பூத்துக் குலுங்கும். செடியில் நீண்ட முட்கள் இருக்கும். செடி, முடம்பட்ட கால் கைப் போலவே இருக்கும். செடி கருமையாகவும் வெண்மையாகவும் இருக்கும். காம்பு நீளமாகவும் மொட்டுகள் கூர்மையாகவும் இருக்கும். குளுமையும் நறுமணமும் கொண்டது. குலை குலையாகப் பூக்கும். பூவின் முதுகில் சிவந்த கோடுகள் இருக்கும்.

**நெருங்கு குலைப் பிடவம் - அகநானூறு**
**முட்புறப் பிடவம் - கலித்தொகை**
**புறவில் சேண் நாறு பிடவம் - முல்லைப்பாட்டு**
**இலையில் பிடவம் ஈர்மலர் அரும்ப - நற்றிணை**

இப்பாடல் வரிகளில் பிடவம் என்றும்,

**தொகுமுகை வழித்த முடக்கால் பிடவு - அகநானூறு**
**வான்பிசிர்க் கருவியில் பிடவு முகை தகைய - ஐங்குறுநூறு**
**அவ்வளை வெரிநின் அரக்கு ஈர்த்து அன்ன**
**செவ்வரி இதழ் சேண் நாறு பிடவு - நற்றிணை**

இப்பாடல் வரிகளில் பிடவு என்றும் வழங்கப்பெறும் இம்மலர் தற்போது “குட்டிப் பிலாத்தி” என்று வழங்கப்பெறுகிறது.

**ர. சங்கீதா, முதுகலைத்தமிழ், முதலாமாண்டு**

## கட்டுரைகள்

# மலைபடுகடாமில் இசைக்கருவிகளின் தன்மைகள்

வேந்தனிடம் பரிசில் பெறப்போகும் பாணரும் விறலியரும் தங்கள் கைகளில் பல்வகை இசைக்கருவிகளை வைத்திருப்பர். அவ்வாறே அவர்கள் நன்னன் நாட்டின் வளத்தையும் சிறப்பையும் பண்களாகப் பாடி ஒவ்வொரு இடமாகச் செல்லுகின்றனர். செல்லும் இடங்களில் பலவகையான ஓசைகளும் ஒலிகளும் கேட்கும் வண்ணமாக இருக்கின்றது.

பாணர், விறலியர் பரிசில் பெற சென்ற விதத்தினையும் அவர்கள் கைகளில் வைத்திருந்த இசைக்கருவிகளைப் பற்றியும் இக்கட்டுரையில் காணலாம்.

### இசைக்கருவிகள்

பாணரும் விறலியரும் தாங்கள் பாடும் பாடலுக்கேற்ற இசையை வழங்க மத்தளம், சிறுபறை, வெண்கலத்தாளம், நெடுவங்கியம், தூம்பு கரடிகை, சல்லி, ஒருகண்மாக்கிணை மற்றும் பேரியாழ் என்ற இனிமையான யாழ் போன்றவற்றைக் கொண்டு சென்றிருக்கின்றனர்.

இவற்றில் சிறப்பானதாக அரிக்குரல் தட்டை என்ற இசைக்கருவி ஒன்று காணப்படுகிறது. மேலும், முழவு, ஆகுளி, எல்லரி, பதலை, போன்ற பல்லிசைக்கருவிகளையும் அவர்கள் கொண்டிருந்தனர் என மலைப்படுகடாம் காட்டுகிறது.

### இசைக்கருவிகளின் தன்மைகள்



#### முழவு

இவ்வகை இசைக்கருவிகள் யாழோசை மழை பொழிவது போல அனைவராலும் விரும்பப்படும் தன்மை உடையதாக இருக்கும்.

முழவின் ஓசையானது மழை பொழியும் போதே முழங்கும் இடி போல இருக்கும் எனக் காட்டுகிறது மலைப்படுகடாம்.

## ஆகுளி

யாழோடும் முழவோடும் சேர்ந்து முழங்கும் தன்மைக் கொண்டது ஆகுளி என்னும் சிறுபறை. ஆகுளி எனும் இசைக்கருவி ஒலிப்பதைப் போன்று ஆந்தைகள் கத்தின என்பதை,

**ஆகுளி கடுப்பக்**

**குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்து**

இப்பாடல் வரிகள் காட்டுகின்றன.

## பாண்டில்

பாண்டில் என்பது வெண்கலத்தை உருக்கிச் செய்த தாளம் எனும் இசைக்கருவியைப் போன்ற ஒன்றாகும்.

## உயிர்த்தூம்பு

யானை பிளிறுவது போல உயிர்ப்பொலி தருவது கொம்பு ஆகும். அதன் வளைவமைதி, தன்னுடைய தலையைப் பின்புறமாகத் திரும்பிப் பார்க்கும் மயிலின் பீலியைப் போல் அமைந்திருக்கும்.

**கண்விடு தூம்பிற் களிற்று உயிர் தொடுமின்**

எனக் காட்டுகிறது இப்பாடல் வரி.

## குறும்பரந்தூம்பு

இவ்வகை இசைக்கருவிகள் மெல்லிய இரங்கல் ஓசையைத் தருகின்றன. இவ்விசைக்கருவி ஊதுகொம்பினைப் போன்ற வடிவமைப்பைப் பெற்று இனிய இசையை வழங்கக்கூடியது.

## குழல்

குழல் என்பது அனைவருக்கும் தெரிந்த இசைக்கருவியாகும். மற்ற இசைக்கருவிகளுக்கு ஆதாரமாக பாட்டின் சுருதியைத் தன்னிடத்தே கொண்டது. இவ்விசைக்கருவி இன்றும் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## தட்டை

இவ்இசைக்கருவிகள் ஒரு புறம் கோலால் உரசி இழுத்து, மறுபுறம் கோலால் தட்டி, இசையை எழுப்புகின்ற உருமி மேளம் என்னும் இசைக்கருவியின் வகையைச் சேர்ந்ததாகும். இதனைச் சப்பளாக்கட்டை என்றும் அழைக்கின்றனர். இக்கருவியின் இசை உயிர்ப்பு ஓசை நயத்தினை உடையது.

## எல்லரி

இது அகலமான வாயினை உடைய இசைக்கருவி. இதனை,

**கடிகவர் பொலிக்கும் வல்வாய் எல்லரி**

எனக் காட்டுகிறது மலைப்படுகடாம்.

## பதலை

இவ்வகை இசைக்கருவிகளுக்குத் தபலா என்ற மற்றொரு பெயரும் உண்டு. தபலாவிற்கு ஒரு பக்கம் தோல் மூடி கட்டப்பட்டிருக்கும். அதைப்போல பதலைக்கும் கட்டப்பட்டிருப்பதை,

**கண்பையென இயக்குமென்**

என்ற வரியின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**நல்யாழ் ஆகுளி, பதலையொடு சுருக்கி**
**செல்லாமோ தில் சில் வளை விறலி**

என்ற பாடல் வரிகளால் பரிசில் பெற விழைவோர் பலவகை இசைக்கருவிகளோடு பதலையையும் கொண்டுச்சென்றனர் என்பது தெளிவடைகிறது.

## பேரியாழின் இயல்பு

பேரியாழ் என்னும் தந்தி இசைக்கருவி மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்ற யாழ் வகைகளில் ஒன்றாகும். இது பெருங்கலம் என்றும் அழைக்கப்படுகிறது. யாழின் திவவு என்பது இறுக வேண்டிய இடத்தில் இறுகியும் மெலிய வேண்டிய இடத்தில் மெலித்தும் நரம்பு தொடங்குகின்ற வார்க்கட்டுகளே ஆகும். பேரியாழில் ஒன்பது வார்கள் உள்ளன. நரம்புகளை வலித்தல், மெலித்தல் போன்றவற்றிற்கு முறுக்காணிகள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

**தொடித் திரிவு அன்ன தொண்டு படு திவவின்,**
**கடிப்பகை அனைத்தும், கேள்வி போகா,**
**குரல் ஓர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்**
**அரலை தீர உரீஇ வரகின்**



விறலியைக் கேசம் முதல் பாதம் வரை வர்ணிப்பதைப் போல பேரியாழினை ஒரு பெண்ணாக எண்ணி வர்ணிக்கும் இயல்பு இப்பாடல் வரிகளில்

காணப்படுகின்றது. பேரியாழின் உறுப்புகள் பெண்ணின் உறுப்புகளுக்கு ஒற்றுமைப்படுத்திக் கூறுவது இப்பாடலின் சிறப்பாகும்.

## யாழின் உறுப்புகள்

**ஆரலை**

இவைப் பரல்களாகும். ஆனால் ஒலித்தராதவையாகும்.

**துளை**

நரம்பு கோத்திருக்கும் பகுதி துளை ஆகும். இது வரகு அரிசியைப் போல காணப்படும்.

**பத்தல்**

பத்தலில் இருந்துதான் மலையின் எதிரொலிப்போல் யாழின் மிழலை எதிரொலிக்கும்.

**ஆணி**

புதிய வெண்மையான நரம்புகள் இந்த ஆணியில் கட்டித் துளையில் முடுக்கப்பட்டிருக்கும்.

**பச்சை**

பத்தலுக்குத் தீட்டப்பட்ட இலை வண்ணம் பச்சை ஆகும்.

**உந்தி**

மணம் கமழும் கூந்தல் இருபிளவாக மார்பினில் புரண்டு விழுவதைப் போலவும், மங்கையின் வயிற்றில் அழகுடன் காணப்படுவதைப் போலவும் இருபிளவாக இருக்கும் யாழின் வயிறு.

**மாமை**

காதல் பருவத்தில் பெண்களின் மேனியில் தோன்றும் பொன் நிறம் மாமை ஆகும். இது பொன்னை அரத்தால் அராவும் போது உதிரும் துகளினைப் போன்று அழகு தரும் நீர்மைப்பட்டத்தினைப் போன்று இருக்கும்.

**உரு**

யாழ், களாப்பழம் போன்ற கருமையால் பளபளக்கும் பாங்கினைக் கொண்டதாக அமைகிறது. அழகான பெண்ணின் அடிவயிற்றில் இருந்து மேல்நோக்கி வளர்ந்து படிந்த மயிரின் ஒழுங்கு போல் யாழில் தையல் உள்ளது. இவ்வாறு யாழின் உறுப்புகளை மலைப்படுகடாம் காட்டுகிறது.

***கு. மஞ்சு***
***முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு***

# இஸ்லாமியப் பார்வையில் பெண்கள்



இஸ்லாமிய பார்வையில் பெண்கள் என்பது இஸ்லாமிய மார்க்கத்தில் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளை குர்ஆன்(ம) ஹதீஸ் மூலம் நடைமுறைப்படுத்துவது ஆகும். இஸ்லாம் மார்க்கம் பெண்களைக் கண்ணியப்படுத்தி அவர்களுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்கியதோடு அடிமைத்தலையிலிருந்து பெண்ணை விடுவித்து சுதந்திரத்தையும் வழங்கியுள்ளது. 1400 வருடங்களுக்கு முன்பே **"பெண் குழந்தை ஓர் நற்செய்தி"** என்று கூறும் ஒரே மார்க்கம் இஸ்லாம்.

## கல்வி

மனிதனை மனிதனாக வாழ வைப்பது கல்வியே. கல்வி கற்பதை, இஸ்லாம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய கடமைகளில் ஒன்றாகக் கொண்டுள்ளது. **"கல்வி கற்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கட்டாயக் கடமை" - ஆதாரம் - புகாரி (ஹதிஸ் 101)** என இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இன்னும், பெண்ணுக்கு மணம் முடிக்கும் உரிமையை இஸ்லாம் வழங்கியுள்ளது. பெண்ணின் சம்மதம் பெற்றே அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட வேண்டும் எனவும் கூறுகின்றது. திருமணத்தின் போது ஒரு பெண் தனது கணவரிடம் மஹர் கேட்கும் உரிமையைப் பெற்றுள்ளாள்.

**"மஹர்"** என்பது மணமகள் விரும்பும் நகை (அ) பொருட்களை மணமகன் விரும்பி மனமுவந்து கொடுப்பது ஆகும். ஓர் ஆண் தான் திருமணம் செய்யப் போகும் பெண்ணுக்கு மஹர் கொடுத்து திருமணம் செய்வதே நபி வழியாகும்.

## மணமுறிவு

நீங்கள் திருமணம் செய்து கொண்ட பெண்களுக்கு அவர்களுடைய **"மஹர்களை"** கண்ணியமான முறையில் கொடுத்து விடுங்கள் என அல்குர் ஆன் 4:4இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

தன் கணவனுடன் இயைந்து வாழ முடியாத சூழல் உருவாகும் போது ஒரு பெண் தன் கணவனிடமிருந்து மணமுறிவு பெறும் உரிமையை இஸ்லாம் வழங்கியுள்ளது. அவ்வாறு அவர்கள் பிரியும் போது கணவன் தன் மனைவிக்கு

ஒரு குவியலை மஹராகக் கொடுத்தாலும் திரும்ப பெறக்கூடாது என்று குர்ஆன் கூறுகிறது. மேலும், தான் விரும்பாத, தனக்கு இயைபு இல்லாத கணவனுடன் காலமெல்லாம் வாழ வேண்டும் என்ற நியதியை இஸ்லாம் விதிக்கவில்லை.

## பெண் சிசுவைக் காத்தல்

**"வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம்"** என்று அல்லாஹ் தனது வேதமான குர்ஆனில் கூறுகிறார். மேலும், அவர்களைக் கொல்வது பெரிய குற்றமாகும் என்று அல்குர்ஆன் 17:31இல் கூறப்படுகிறது.

### சொத்துரிமை

இறந்து போன பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுப்போன பொருட்களில் அதிகமாக இருந்தாலும் குறைவாக இருந்தாலும் ஆண்களுக்கும் பங்குண்டு. அதில் பெண்களுக்கும் பங்குண்டு. இப்பங்கீடு கட்டாயக் கடமை எனவும் அல்குர்ஆன் 4:7இல் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

## சமநீதி

ஆண்களிலும் பெண்களிலும் இறை நம்பிக்கை கொண்ட நிலையில் நற்செயல்களைச் செய்தோர் அனைவரும் சொர்கத்தில் நுழைவர். அவர்களுக்கு அநீதி இழைக்கப்படமாட்டாது என்பதை அல்குர்ஆன் 4:124 காட்டுகிறது.


## பெண்கள் மீது அவதூறு

ஒழுக்கமுள்ள பெண்கள் மீது பழி சுமத்தி, நான்கு சாட்சிகளைக் கொண்டு வராதவர்களுக்கு எண்பது(80) கசையடிகள் கொடுங்கள். அவர்களின் சாட்சியத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாதீர்கள் அவர்களே குற்றம் புரிபவர்கள் என அல்குர்ஆன் 24:4இல் கூறப்பட்டுள்ளது.

இவ்விறைக் கொள்கைகளை அறியாத சிலர், இஸ்லாம் என்பது பெண்களை அடக்கி ஆள்கின்ற மதம் என்று தவறாகக் கருதுகின்றனர். 1400 வருடங்களுக்கு முன்பே பெண் குழந்தை ஓர் நற்செய்தி, பெண்ணும் கல்வி கற்கலாம், திருமணத்தின் போது பெண்ணின் சம்மதம், சொத்தில் பங்குண்டு, நற்செயல்களைச் செய்தால் சொர்கத்தில் நுழையலாம், இன்னும் ஏராளமான சுதந்திரங்களை இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ளது. எனவே இஸ்லாம் பெண்களைக் கண்ணியப்படுத்தும் ஓர் இனிய மார்க்கம்.

ர. பாத்திமா லுபேரியா, இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

# பழமொழி நுண்பொருள்



நம் முன்னோர்கள் அன்றாட வாழ்வியலில் பயன்படுத்தும் பழமொழிகள் அனைத்தும் பொருள் பொதிந்ததாக இருக்கின்றன. அவை வரலாற்று உண்மைகளை உணர்த்தி நிற்கின்றன.

### பொன் கிடைத்தாலும்
### புதன் கிடைக்காது

இது நாம் அடிக்கடி கேட்கும் ஒரு பழமொழி. பொதுவாகத் துணிமணிகள், நகைகள் வாங்கும் போதும் வீட்டில் நடக்கும் நல்ல நிகழ்வுகளுக்கு நாள் குறிக்கும் போதும் அதிகமாக உபயோகப்படுத்தப்படும் பழமொழி.

பொன் என்பது வியாழன் கோளைக் குறிக்கும். புதன் என்பது மெர்குரி என்று அழைக்கப்படும் மற்றொரு கோளாகும். வியாழன் 12 வருடங்களுக்கு ஒரு முறை சூரியனைச் சுற்றி வருகிறது. இதற்குக் காரணம் புதன் சூரியனுக்கு அருகிலும் வியாழன் தொலைவிலும் உள்ளதுதான்.

புதன் சூரியனுக்கு அருகில் இருப்பதாலும் அளவில் சிறியதாகவும் சுற்றி வரும் வேகம் அதிகமாக இருப்பதாலும் இதனைப் பார்ப்பது மிகவும் கடினம். ஆனால், வியாழன் உருவத்தில் பெரியது. சுற்றி வரும் தூரம் மற்றும் சுற்றுவதற்கு எடுத்துக்கொள்ளும் நாட்கள் அதிகம்.

சூரியனைவிட்டு மிகவும் தூரத்தில் இருப்பதால், வெறும் கண்களால் வியாழனை எளிதாகப் பார்க்க முடியும். வியாழனைப் பார்க்க முடிந்தாலும் புதனைப் பார்க்க முடியாது. அதாவது பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது. இதுவே இப்பழமொழியின் உண்மைப் பொருள் ஆகும்.

ரா. பிரியதர்ஷினி
இளங்கலைத்தமிழ்
முதலாமாண்டு

# நூல் நயம் பாராட்டல்




**நூலின் பெயர்** : தமிழ் புரட்சிப் பூக்கள்

**நூலாசிரியர்** : ஏ. பி. சௌந்தர்ராஜன்

**முதல் பதிப்பு** : 2018-2019

**பதிப்பகம்** : சந்திரன் பதிப்பகம்

ஏ. பி. சௌந்தர்ராஜன் அவர்கள் இயற்றிய **தமிழ் புரட்சிப் பூக்கள்** என்ற நூல் ஒரு கவிதைத் தொகுப்பாகும். இந்நூலில் 82 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இந்நூலின் முதல் கவிதை **"திருக்குறளைத் தேசிய நூலாக்கு"** என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது. நூலின் கடைசி கவிதை **"தமிழன் நாடாளும் நாள்"** என்ற பொருண்மையில் அமைந்துள்ளது.

இவருடைய கவிதைகளைப் பாமர மக்களும் எளிதில் படித்து, பொருள் உணரும் வகையில் எளிய இனிய தமிழில் படைத்துள்ளார் என்பது இந்நூலின் மற்றும் ஒரு சிறப்பாகும்.

அவருடைய நூலினைக் குறித்து,

**புதிய உலகத்தைப் படைக்கும் ஓர் ஆயுதம்**
**புனித உலகத்தை உருவாக்கும் ஒரு பெட்டகம்**

என்று குறிப்பிட்டு இருப்பது கவிதைகளின் பொருண்மைகளில் அவருக்குள்ள ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகிறது.

அவர் இயற்றிய கவிதைகளில் சில...

**தமிழ் ஊற்றுக்கள்** என்னும் பொருண்மையில் அமைந்த இக்கவிதை தமிழின் பெருமையைப் பறைசாற்றுவதாக அமைந்திருக்கிறது. மேலும், தமிழ் என்றும் தன் வளமையிலிருந்து குன்றாது என்பதை ஒவ்வொரு வரிகளும் அறுதியிட்டுக் கூறுகின்றன.

**தமிழ் ஊற்றுகள் என்றும்**
**வற்றாது வளங் குன்றாது இருக்கட்டும்**
**மலையின் மீது இட்ட விளக்கினார் போல**
**அணையாது இருக்கட்டும்**
**காற்றும் அஞ்சாது திகழட்டும்!**

அடுத்ததாக, **விடியத்துடிக்கும் இரவுகள்** என்னும் தலைப்பிலான கவிதையில் வறுமை, சோகம், தோல்வி போன்ற எதிர்மறையான வாழ்வியல் நிகழ்வுகளைத் துன்பங்களை அழித்தொழித்து வரலாறு படைக்க நம்பிக்கையைக் கையில் கொள்ள வேண்டும் என்கிறார் கவிஞர். தன்னம்பிக்கை என்னும் விதையைப் படிப்போர் மனதில் ஊன்றும் வகையில் அமைந்திருப்பது இக்கவிதையின் சிறப்பாகும்.

**வறுமை என்னும் இரவுகளையும்**
**சோகம் என்னும் இரவுகளையும்**
**தோல்வி என்னும் இரவுகளையும்**
**களைத்திடும் வரையில்**
**நம்பிக்கை என்னும் ஒளிகளைக் கொண்டு**
**நாளைய நாட்களுக்கு வரலாறு வடித்திடுவீர்!**

**சமாதானம் பெறுங்கள்** என்னும் கவிதை தானத்தின் பெருமையை எடுத்துக்காட்டுவதுடன் செயல்களில் பொறுமை முக்கியமானது என்கிறது. மேலும், மன அமைதி கிடைக்கும் நன்னெறிகளை நாடுங்கள் என்றும் எடுத்துரைக்கின்றது.

**தமிழர்களே!**
**தானத்தில் உயர்ந்தது எத்தனையோ - ஆனால்**
**தேவை இன்று நிதானம்**
**நீங்கள் தானம் செய்யும் போது**
**கிடைப்பது என்ன? உங்களுக்கு அமைதி!**

மற்றுமொரு கவிதையான **பெண்மையைக் காப்பீர்** பெண்ணுக்குரிய பாதுகாப்பை வலியுறுத்தி நிற்கிறது.

**ஆணும் பெண்ணும் சமமாய் இருக்க -அதில்**
**பெண்ணின் கற்பை அழித்திடல் நலமோ?**
**அக்கயவர்கள் கூட்டத்தை அடியோடொழிக்க**
**நல் திட்டத்தைத் தீட்டி தடைகள் செய்வீர்!**

இவ்வாறு இவரது கவிதைகள் சமுதாய அக்கறையோடு படைக்கப்பட்டிருக்கின்றன. படிப்போரின் உள்ளத்தை நெகிழச் செய்து, புரட்சிப் பூக்களை மலரச் செய்கின்றன.

சா. யோகேஸ்வரி
இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு

# கவிதைகள்

## ஓர் அகதியின் தேடல்

ஒரே மொழி
ஒரே இனம்
எங்கள் பெயரோ அகதி!

தேடுதலோடு பிறரைக்
காணும் போது
அறிமுகமாகும் முதல் வார்த்தை
அகதி!

அகதியாய் பிறந்தேன்...
அகதியாய் வளர்ந்தேன்..
இறப்பதற்கு முன்னதாக வாழ்க்கை
மாறுமோ என....
எங்கள் விடியலைத் தேடி
அலைகின்றேன்....

சிறகுகள் வெட்டப்பட்ட
பறவைகள் நாங்கள்!
இறகுகள் இன்றி தவிக்கும்
உறவுகள் நாங்கள்!

எங்கள் வீடோ புறாக்கூடு!
நாகரீக உலகில்
அநாகரீகமாகக் கழிக்கின்றோம்
சொற்ப வாழ்வு!

யாசகமான வாழ்க்கையில்...
எனக்கான தேவையை நானே
நிறைவு செய்து கொள்ள முடியாமல்
வியாசகம் பேசி கழிகின்றன
வாழ் நாட்கள்!

கனவுகளும் கலைந்து போகின்றன
அகதி என்ற ஒற்றை வார்த்தையில்!

தொலைந்து போன
என் வாழ்வைத்
தேடி அலையும்
கூண்டுப் பறவை நான்!



ர. ரஞ்சிதா
முதுகலைத்தமிழ்
இரண்டாமாண்டு

# கண்டால் வரச்சொல்லுங்கள்

**தன்னந்தனியே துணையின்றி முளைத்த தாவரத்தை...!!**
**தேடித்தேடி தங்கமாய் தின்ண திரிகடுகத்தை....!!**
**தாளம் போட்ட தண்ணீர்த் துளிகளை...!!**
**திக்கெட்டும் திசையறிய வைத்த சூரியனை...!!**
**தாலாட்டுக்குத் துணையாய் நின்ற சந்திரனை...!!**
**தென்னங்காயைத் தெகிட்ட தெகிட்ட பருகிய பானத்தை...!!**
**தளர்வின்றி தமிழைப் படித்த பார்வைகளை...!!**
**தாகமின்றி தாராளமாய் பருகிய தண்ணீரை...!!**
**துன்பமின்றி சுவாசித்த காற்றை...!!**
**தோல்வி பழகி தன்னலமின்றி தாங்கிய உறவுகளை.. !!**
**தன்னிலையை மறந்து தொண்டு புரிந்த ஆன்மீகத்தை.. !!**
**தனக்கென்றுயின்றி தன்மையாய் வாழ்ந்தவனை..!!**
**தழுவலாய் பிரபஞ்சத்தைப் பாராட்டி**
**இணைபிரியாது இணைந்திருந்தவனை....!!**
**கண்டால் வரச்சொல்லுங்கள்!!!**


*லோகஸ்ரீ. பி*
*வணிகவியல், இரண்டாமாண்டு*

# தமிழ்த்தாய்

நான் செல்லும் வழிக்கு உண்டு எல்லை!
நான் பேசும் பேச்சுக்கு உண்டு எல்லை!
நான் எழுதும் எழுத்துகளுக்கும் உண்டு எல்லை!
எனக்கு உண்டு எல்லை - ஆனால்
தமிழ்தாயின் பெருமைக்கு ஈடு இணையில்லை!
இல்லை என்றும் எல்லை!

சா. பத்ம பிரியா
கணினி பயன்பாட்டியல், முதலாமாண்டு

# கொரோனா



கொத்து கொத்தாக உயிர்களை மாய்த்த கொரோனா
நீ எங்கிருந்து வந்தாய்
உன்னைக் கண்ட நாங்கள் பயந்து போனோம்
எங்கள் காலம்
எப்போது தேடி வரும்...!
கண்களில் கண்ணீரை மட்டுமே கண்ட நாங்கள் இப்போது
இரத்தத்தைக் காண்கிறோம்
கொரோனா உன்னால்
எத்தனை சோதனைகள்
ஏன் இந்தத் தாண்டவம்...!
வாய் விட்டு சிரித்து வாழ்ந்து வந்த எங்களுக்கு
வாய் மூடி வாழ
கற்று தந்த கொரோனாவே
முகத்தை மூடி சுவாசிக்க கற்றுக் கொண்டோம்
ஆனால்
மனதில் உள்ள துன்பத்தை மறைத்து
மறந்து சிரிக்க?????

ஜெ . நிஷாந்தி
இளங்கலைத்தமிழ்
மூன்றாமாண்டு

# பெண்



மண்ணின் மகத்துவம் பெண்!...
மானிடரின் செல்வம் பெண்!....
மரியாதைக்கு உரியவள் பெண்!..
தாயாக, தாரமாக, தோழியாக
தங்கையாக, அக்காவாக, மகளாக
பாட்டியாக இன்னும் பல
உறவாக, உயிராக உலவும்
உன்னத பிறப்பினை உயர்த்துவோம்!....
பெண்மையின் சக்தியை உணர்த்துவோம்!....
உயர்ந்த படைப்பான பெண்ணைக் காப்போம்!....
தன்மான மங்கையரை மதிப்போம்!....
சிறந்த பெருமைக்குரிய
பல் திறமைகள் கொண்ட
தியாகப் பிறப்பான
கண்ணின் கண்மணிகளை
ஞாலம் உள்ள வரை போற்றுவோம்!!!

மு. சரஸ்வதி
உயிர்வேதியியல்
இரண்டாமாண்டு

# அன்னை



அன்னை என்பவள் இல்லையென்றால் இவ்வுலகம் இல்லை!
அவள் எனக்கோர் இரகசியப் பெண்!
அவள் வயிற்றில் பிறப்பதற்கு முன்பு
நானும் அவளுக்கோர் இரகசியம்தான்!!
இறைவனின் மறுபிறப்பு!
கருவறைக் குழந்தையின் முதல் தோழி!
கற்றுக்கொண்ட முதல் மொழி!
ஆகாய கங்கை நதி!
அற்புத உயிர்களின் சரணாகதி!
பொறுமையில் ஒரு பூமி!
தியாகத்தில் ஓர் ஆழி!
தென்றலாய் தாலாட்டும் மலர்த்துளி!
குழந்தைகளின் வாழ்வே உயிர்வாசம்!
கொண்டவன் நலமே சொர்க்கவாசம்!
ஆண்டவனின் அற்புதப் படைப்பு!
அட்சயப் பாத்திரம் அவள்
அன்பின் இருப்பு!
வாரி வழங்குவதில் வாணி!
கரை சேர்க்கும் தோணி!
கருணை நீர் சுரக்கும் கேணி!
நோய் தீர்க்கும் தன்வந்திரி!
குணத்தில் முப்பெருந்தேவி!
கோபத்தில் ஒரு பத்திரகாளி!
உலகின் சிறந்த வள்ளல்!
உன்னைக் கண்டால் மனதில் ஒய்யாரத்துள்ளல்!
உயிர்களின் சுவாசம் அம்மா!
உன்னத மலர்களின் வாசம் அம்மா!
உயிர்களின் நேசம் அம்மா!
உலகத்து உயிர்கள் உச்சரிக்கும்
உன்னத மந்திரம் அம்மா! அம்மா!
இவ்வுலகிற்கு இயற்கை அழகு!
எனக்கு என் தாய் அழகு!
உலகின் சிறந்த அழகி
என் உயிர் அம்மா!

*வெ. சுஷ்மிதா*
*முதுகலைத்தமிழ்*
*முதலாமாண்டு*

## அப்பா

ஒவ்வொரு மகள்களின் மகிழ்சிக்குக் காரணம்
அப்பா மட்டும் தான் ..!
எல்லா தந்தையரும் தன் மகள்களுக்கு
மற்றொரு கடவுள் தான் ..!



அப்பாவின் அன்பு கிடைத்த மகள்
சிறகு முளைத்த தேவதை தான்..!
மகள்களுக்கு அம்மாவின் அன்பை விட
தந்தையின் அன்பு மகத்துவமானது தான் ..!

கண்களில் பாசத்தையும் கோபத்தையும்
அதிகம் வெளிபடுத்துவது அப்பா தான் ..!
கண்ணுக்குக் கண்ணாகப் புதல்வியரைக்
கண்டிப்புடன் காப்பது தந்தையர் தான்...!

என்னை வயிற்றில் சுமக்கவில்லை என்றாலும்
வாழ்நாளெல்லாம் நெஞ்சில் சுமப்பது அப்பாதான் ..!
ஒவ்வொரு மகளுக்கும் அவள் தந்தையே
மகனாகப் பிறப்பது ஒரு வரம் தான்..!

கி . நந்தினி
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

## உயிர்த்தோழிக்கு ஒரு கவி

என் மகிழ்ச்சிக்கு காரணம் நீ!
என் முயற்சிகளுக்குப் பக்கபலம் நீ!
என் வெற்றிப்படிகட்டுகள் நீ!
என் உயிருக்கு உறுதுணை நீ!
என் பார்வையானவளே!
என் நெறியானவளே!
உன் கருத்திற்கு எதிர் கருத்து இல்லை
உன் மீதான நம்பிக்கையில்!
நம்பிக்கையே வாழ்க்கை – ஆதலால்
தொடரும் நம் நட்பு இவ்வையகம் உள்ள வரை!

பெ. சாந்தி
முதுகலைத்தமிழ், முதலாமாண்டு

# கல்வியின் பிம்பம் இவர்கள்.......




என் வாழ்வில்
நகர்ந்த நாட்களைத்
திரும்பிப் பார்த்தேன்.....
நகர்ந்த நாட்களை விட
இவர்களின் பிம்பங்கள் தான் அதிகம்...

வெற்றிக்கு வித்திட்டு
இன்னமும்
எங்கள் பின்னால் மறைந்து
எங்களை ரசிப்பது
இன்னும் எத்தனை காலம்....?

மழலையில் மடியில் பாடம் கொடுத்தாய்....
பேதையில் பொறுமையைக் கற்றுக் கொடுத்தாய்...
பெதும்பையில் பணிவைக் கற்றுக் கொடுத்தாய்....
மங்கையில் மானுடம் கற்றுக் கொடுத்தாய்...
மடந்தையில் மனிதத்தைக் கற்றுக் கொடுத்தாய்...
தெரிவையில் தேவையான அறிவைக் கொடுத்து...
அரிவையில் அடக்கத்தைப் புகட்டி.....
பேரிளம் பெண்களின் குணத்தைக் கொடுத்தாய்.....

எங்கள் தாய்க்கு நாங்கள் மழலையாய்
இருந்த நேரங்களை விட.....
வகுப்பறையில் உங்கள் மகள்களாய்
இருந்த நாட்கள் தான் அலாதி...

ஆசிரியரை நோக்கி
தயக்கத்துடன் முதல் அடியை
எடுத்து வைத்த ஞாபகம் அன்று......
நேர் கொண்ட பார்வையோடு நகர்கிறேன்
இவர்களின் (கல்வி) பிம்பத்தைக் கொண்டு இன்று....

ஜே. சோனா
முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு

# அறிவியல் செய்திகள்

## மரியா டெலக்ஸ்

- மரியா டெலக்ஸ் ஹங்கேரி நாட்டில் புடாபெஸ்ட் என்ற நகரில் 1900ஆம் ஆண்டு டிசம்பர் 12 அன்று மரியா டெலக்ஸ் பிறந்தார். தந்தை பெயர் அலதார். தாய் மரியா லாபண்டி டெலக்ஸ்.
- பெஸ்ட் பல்கலைக்கழகத்தில் இளங்கலை பட்டம் முடித்தார். பின் சூரிய சக்தியை எவ்வித விரயமும் இல்லாமல் மின்சார சக்தியாக மாற்றும் அரிய கண்டுபிடிப்பை செய்து காட்டினார்.
- இரண்டாம் உலகப் போரின் போது சூரிய அடுப்பு, கடிகாரம் என இவரது படைப்புகள் தொடர்ந்து கொண்டே இருந்தது. அதனால் இவருக்கு **சூரிய சக்தி மகாராணி** என்ற பட்டம், பெயருடன் வந்தது.
- 1952இல் சூரிய சக்தியைக் கொண்டு மிகவும் மலிவான விலையில் கடல்நீரைக் குடிநீராக மாற்றுதலைக் கண்டுபிடித்தார்.
- அமெரிக்க பெண் பொறியாளர் விருது உட்பட பல பரிசுகளைப் பெற்ற மரியா 1995ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் நாள் புடாபெஸ்ட் நகரில் காலமானார்.

**சித்திகா பிர்தோஸ். ர**
**வணிகவியல்**
**முதலாமாண்டு**

## தாவர எண்ணெய்கள்



தாவரங்கள் இறைவன் படைப்பில் ஓர் உன்னதமான படைப்பு ஆகும். தாவரங்கள் பல வகைகளிலும் மனிதனின் வாழ்வியலோடு இயைந்துள்ளது. தாவரங்கள் இல்லையென்றால் உயிரினங்களின் வாழ்க்கை என்பது கேள்விக்குறியாகிவிடும்.

தாவரங்களில் இருந்து கிடைக்கப்பெறும் எண்ணெய்களை மனிதர்கள் பயன்படுத்தி வருகின்றனர். உலகின் அனைத்துப் பகுதிகளிலும் விளைந்து நிற்கும் தாவரங்களில் இருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. தாவர எண்ணெய் என்பது விதைகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் வகைகள் உணவு சமைக்க, செயற்கை எண்ணெய் தயாரிக்க, உணவு வகைகள், பொருட்கள் தயாரிக்கப்பயன்படுகிறது.

சிறிய எள் வகையில் இருந்து பெரிய தேங்காய் வகை வரையுள்ள தாவரங்களில் இருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. சோயா பீன்ஸிலிருந்து எடுக்கப்பெறும் எண்ணெய்தான் உலகின் முக்கியமான எண்ணெய் ஆதாரம் ஆகும்.

தாவர எண்ணெய்களில் ஆலிவ் எண்ணெய் குறித்த செய்திகளைக் காண்போம். ஆலிவ் எண்ணெய் எடுக்க இலையுதிர் காலத்தில் ஆலிவ் மரத்தில் பழுத்த பழங்கள் பறிக்கப்படுகின்றன. இப்பழங்கள் மரங்களில் இருந்து நன்கு உலுக்கி, உதிர்க்கப்படுகின்றன. பின்பு அவை கைகளால் சேகரிக்கப்படுகின்றன. அறுவடை முடிந்ததும் பழங்களுடன் கலந்துள்ள சருகுகள், காம்புகள் நீக்கப்படுகின்றன. பின்பு எண்ணெய்காகச் செக்குகளுக்கு அனுப்பப்படுகின்றன. பின்பு செக்குகளில் ஆட்டி எடுத்துப் பிழிய அனுப்பப்படுகிறது.



எண்ணெய் பிழியும் இயந்திரம், ஆலிவ் பழங்கள் தடிமனான பசை போல அடைக்கப்பட்டு, குறிப்பிட்ட வட்ட பாய் வடிவில் செய்யப்படுகின்றன. பின்பு இந்தப் பாய்கள் எண்ணெய் பிழியும் பொறிக்கு வரிசையாக அனுப்பப்படுகின்றது. இந்த இயந்திரம் மிகவும் அழகாக பிழிகிறது. ஆலிவ் எண்ணெய் இயந்திரத்தில் இருந்து வெளிப்படுகிறது. பின்பு சேகரிக்கப்படுகின்றன.

இயந்திரங்களின் கண்டுபிடிப்புகளால் மனிதன் தனக்குத் தேவையான மருத்துவக் குணங்கள் அடங்கிய ஆலிவ் கொட்டைகளிலிருந்து எண்ணெய்யை எளிதாகப் பெற்றுக்கொள்கிறான். ஆக்கத்திற்குப் பயன்படும் அறிவியல் வளர்ச்சி மனிதனின் நண்பன் என்பதில் சற்றும் ஐயமில்லை.

**கா. ரம்யா**

**உயிர் வேதியியல், இரண்டாமாண்டு**

# உணவே மருந்து

## சித்த மருத்துவம்

சித்தர்கள் நாடியைச் சீராக்கும் மருந்துகளை நமக்கு அளித்துள்ளனர். அவை நாம் இயல்பாக உண்ணும் சுக்கு, இஞ்சி இவற்றிலிருந்து தொடங்குகிறது. சித்த மருத்துவத்தில் திரிபலா, திரிகடுகம் இவ்விரண்டும் மிகவும் பிரசித்தி பெற்றவைகள். சீரான உடல் நலத்துடன் இருக்க இவ்விரண்டும் சூரணமாகவோ அல்லது இவற்றைத் தனியாகச் சமையலில் சேர்த்தோ உண்ணுதல் சிறப்பானதாகும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் மூன்றும் சேர்ந்தது திரிபலா ஆகும். சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் சேர்ந்தது திரிகடுகம் ஆகும்.



**காலை இஞ்சி கடும்பகல் சுக்கு**
**மாலை கடுக்காய் மண்டலம்**
**உண்டால் விருத்தனும் பாலனாமே**

என்பது அனைவரும் அறிந்த சித்தர் பாடல். காலை வெறும் வயிற்றில் இஞ்சியும் நண்பகலில் சுக்கும் இரவில் கடுக்காயும் தொடர்ந்து 48 நாட்கள் (ஒரு மண்டலம்) சாப்பிட்டு வந்தால், கிழவனும் குமரன் ஆகலாம். அதாவது இளமைப் பொலிவுடன் திகழலாம் என்கிறது இந்தப்பாடல். இவ்வரிசையில் உள்ள கடுக்காய் சித்த மருத்துவத்தில் முக்கியமான இடத்தை வகிக்கிறது.

**கடுக்காயின் சிறப்பு:**

- ✓ மனிதனுடைய உடல், மனம், ஆன்மா ஆகியவற்றை தூய்மை செய்யும் மருத்துவக்குணம் கடுக்காய்க்கு உண்டு.
- ✓ கடுக்காய்க்கு அமிழ்தம் என்றொரு பெயரும் உண்டு. கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளையெல்லாம் அகற்றும் தன்மை கொண்டது.
- ✓ கடுக்காயின் சுவை துவர்ப்பாகும். நமது உடலிற்கு அறுசுவைகளும் சரிவரக் கிடைக்க வேண்டும். அறுசுவைகளுள் எச்சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும். நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவு. துவர்ப்பின் சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும்.

**“ஆயுட்காலத்தைப் பெருக்க கடுக்காய் உண்போம்”**

ஆகையால் இஞ்சி, சுக்கு, கடுக்காயைப் பயன்படுத்தி முன்னோர்கள் வாழ்ந்த நோயில்லா வாழ்வைப் பெறுவோம்.

அ. ஸ்டெல்லாமேரி
முதுகலைத்தமிழ், முதலாமாண்டு

# மருந்தாகும் உணவு முறைகள்



- தினமும் ஐந்து விதமான பழங்களையும் சில காய்கறிகளையும் உணவாக எடுத்துக் கொண்டால் ஆரோக்கியமும் அழகும் எப்போதும் நிலைத்திருக்கும்.
- தினமும் ஒரு டம்ளர் மாதுளை பழச்சாறு குடிப்பதால் உடலில் ரத்த அழுத்தம், கொழுப்பு, நச்சுத்தன்மை எனப் பல பிரச்சினைகள் தீரும்.
- மனநலக் கோளாறு மற்றும் மூளை நரம்புகளில் பாதிப்பு உள்ளவர்கள் நாள்தோறும் உணவில் தர்பூசணி துண்டுகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். மன அழுத்தம், பயம் போன்ற பாதிப்புகளைத் தகர்க்கும் விட்டமின் பி-6 தர்பூசணியில் அதிகம் உள்ளது.
- ஆப்பிள் தோலில் பெக்டின் என்ற வேதிப்பொருள் இருப்பதால், தோலோடு சாப்பிட வேண்டும். பெக்டின் நம் உடலில் நச்சுக்களை நீக்குவதில் திறமை வாய்ந்தது. பழங்களை நன்கு சுத்தம் செய்து நீரில் கழுவி உண்ண வேண்டும்.
- பூண்டு சாப்பிட்டால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். வெள்ளை அணுக்கள் அதிகம் உற்பத்தியாகும். இது கேன்சர் செல்கள் உருவாகாமலும் தடுக்கும் சக்தி கொண்டது.
- சிவப்பணு உற்பத்திக்குப் புடலங்காய், பீட்ரூட், முருங்கைக்கீரை, அவரை, பச்சை நிறக் காய்கள், உளுந்து, துவரை, கம்பு, சோளம், கேழ்வரகு, பசலைக்கீரை போன்றவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
- பச்சைப்பயறு, மோர், உளுந்துவடை, பனங்கற்கண்டு, வெங்காயம், சுரைக்காய், நெல்லிக்காய், வெந்தயக்கீரை, மாதுளம் பழம், நாவற்பழம், கோவைக்காய், இளநீர் போன்றவை உடலின் அதிகப்படியான சூட்டைத் தணிக்கும்.
- சுண்டக்காயை உணவில் சேர்த்தால், நாக்குப்பூச்சித் தொல்லை, வயிற்றுப்பூச்சித் தொல்லை இருக்காது.

- வெங்காயம், பூண்டு, சிறுகீரை, வேப்பிலை, மிளகு, மஞ்சள், சீரகம், கருப்பட்டி, வெல்லம், சுண்டைக்காய் வற்றல், செவ்விளநீர், அரைக்கீரை, எலுமிச்சை போன்றவை உடலில் உள்ள நச்சுத்தன்மையை நீக்கும் உணவுகள்.
- பொன்னாங்கண்ணிக் கீரையைத் துவட்டல் செய்து சாப்பிட்டு வந்தால், மூல நோய் தணியும். இந்தக் கீரையின் தைலத்தைத் தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால், கண் நோய்கள் நெருங்காது.
- சமையலுக்குக் கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்துவது மிக மிக நல்லது. கைக்குத்தல் அரிசியில் நார்ச் சத்துக்கள் நிறைந்துள்ளன.
- பப்பாளிப் பழங்கள் மிகவும் சத்து மிகுந்தவை. வாரம் ஒரு முறை பப்பாளிப் பழம் வாங்கிச் சாப்பிடுவது கண்களுக்கு நல்லது.
- அதிக நாட்கள் உணவைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். அப்படி வைக்கப்பட்ட உணவுகளில் சத்துக்கள் குறைந்துவிடுவதோடு, உடல் ஆரோக்கியத்திற்கும் தீங்கினை விளைவிக்கும்.
- தினசரி சிறு துண்டு அன்னாசிப்பழத்தைத் தேனில் ஊற வைத்து அந்தத் தேனை இரண்டு வாரம் சாப்பிட்டால் கல்லீரல் ஆரோக்கியமாக இருக்கும்.
- பலமான விருந்து காரணமாகச் செறிமானக் கோளாறு ஏற்பட்டால் புதினா, தேன், எலுமிச்சைச் சாறு ஆகியவற்றில் ஒவ்வொரு தேக்கரண்டி எடுத்துக்கலந்து சாப்பிட்டால் போதும். கல்லும் கரைந்துவிடும்.
- கேன்சர் செல்களைத் தகர்க்கும் சக்தி திராட்சையின் தோலில் இருக்கிறது. திராட்சை கொட்டைகளிலிருந்து பெறப்படும் மருந்துப் பொருட்கள், வைரஸ் எதிர்ப்புச் சக்தியைப் பெரிதும் தூண்டுகின்றன.

ஆதலால் உடலுக்கு நன்மை பயக்கும் உணவு முறைகளைப் பின்பற்றி வாழ்வோம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை என்றும் நினைவில் கொள்வோம்.

**உணவே மருந்து! மருந்தே உணவு!**

**சி. சூர்யா**
**முதுகலைத்தமிழ்**
**இரண்டாமாண்டு**

# மருத்துவப் பழமொழிகள்



1. அரை வயிற்றுக்கு ஆயுள் அதிகம்.
2. கோழைக்கு எதிர் தூதுவளை. நம் குடும்பத்தின் நன்மைக்கு துளசி இலை.
3. மூலிகை அறிந்தால் மூவுலகம் ஆளலாம்.
4. வல்லாரை இருக்க எல்லாரும் சாவதேன்.
5. பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்.
6. விருந்தும் மருந்தும் மூன்று நாள்.
7. வெங்காயம் உண்போர்க்குத் தங்காயம் பழுதில்லை.
8. நன்னாரி மேனியைப் பொன்னாக்கும்.
9. ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்.
10. காலை இஞ்சி, கடும் பகல் சுக்கு, மாலை கடுக்காய் வாழ்வை வளமாக்கும்.

ம. லாவண்யா
நிர்வாகவியல், முதலாமாண்டு



வி. பூஜா
கணிதவியல்,
இரண்டாமாண்டு



ரா. பிரியதர்ஷினி
இளங்கலைத்தமிழ்
முதலாமாண்டு

# விடுகதைகள்



1. மூடாதா வாய்க்கு முழம் வால் அது என்ன?
2. கடகடா குடுகுடு நடுவிலே பள்ளம் அது என்ன?
3. ஆள் இறங்காத கிணற்றுக்குள் மரம் இறங்கிக் கூத்தடிக்கிறது அது என்ன?
4. கையிலே கணக்குப் போடும் கணக்குப்பிள்ளை யார்?
5. வீட்டைச் சுற்றிப் புளியமரம் உலுக்கினால் கலகல என்னும் அது எது?
6. நடுக்காட்டில் ஈட்டி அது என்ன?
7. ஒற்றைக்கால் குருவி உழக்கு முட்டையிடும் அது எது?
8. மொட்டைப் பாறையில் மூடிய கண்கள் மூன்று. அது எது?
9. ஏரித்தண்ணீர் வற்ற வற்ற எருமைக்கடா உப்ப உப்ப நான் யார்?
10. ராசா மகள் பூ இல்லாமல் சடை போட மாட்டாள். அவள் யார்?

**பா. வினித்தா**
முதுகலைத்தமிழ்
இரண்டாமாண்டு



*மு. ரம்யா*
*இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு*

# பண்டிகைகள் வரலாறு

இந்த ரமலான் மாதம் தான் "திருக்குர்ஆன்" அருளப்பட்ட மாதம். இம்மாதம் முழுவதும் "நோன்பு" நோற்பார்கள். இம்மாதத்தில் நிறைய தானம் செய்வார்கள்.



## நோன்பின் சிறப்பு

நோன்பு என்பது அதிகாலையில் இருந்து சூரியன் மறையும் வரை பசி, தாகம், இச்சை இவைகளை இறைவனிடத்தில் இருந்து நன்மை பெறுவதற்காகப் பொறுத்து கொள்வதாகும்.

பசியோடு இருத்தல் என்பது இறைவனுக்காக மட்டும் இல்லாமல் பசியின் கொடுமையில் வாடும் மக்களின் நிலையை உணர வேண்டும் என்பதற்காகவும்தான். ரமலான் மாதம் முழுவதும் இறைவனுக்கு அஞ்சி முழு இறைவணக்கத்துடன் நோன்பிருத்தல் என்பது அனைத்து இஸ்லாமியர்களின் கடமை என திருகுரானில் கூறப்பட்டுள்ளது.

நோன்பிருக்கும் ஒருவன் தான் செய்த பாவத்திற்காக இறைவனிடத்தில் இறைஞ்சினால் இறைவன் அதை உடனடியாக மன்னிப்பான். நோன்பு மாதத்தில் இறப்பவர்கள் நேரடியாகச் சொர்க்கம் எய்துவார்கள் என்பது நபிகளால் கூறப்பட்ட உண்மை. ரமலான் மாதம் இறைவனுக்காக மட்டும் என்ற எண்ணத்துடன் இருத்தல் வேண்டும்.

ரமலானின்

## நோன்பு பிடிப்பது

இஸ்லாமியர்கள் நோன்பு பிடிப்பதை **ஸகர்** என்பார்கள். ஸகர் என்பது சூரியன் உதயமாவதற்கு முன்பு எழுந்து மிக எளிமையான முறையில் சாப்பிட வேண்டும். பசி இல்லை என்றாலும் சிறிதளவாவது சாப்பிட வேண்டும்.

**நவைது ஸவ்மகதின் அன் அதாயி**
**∴பர்ளி ரமளானி ஹாதி ஹிஸ்ஸனதி**
**லில்லாஹித ஆலா**

என்ற துஆவை ஓத வேண்டும். இதன் பொருள் இறைவனுக்காக நான் நோன்பு வைக்கிறேன் என்பதாகும். இத்துஆவைக் கூறியதிலிருந்து எவற்றையும் சாப்பிடக் கூடாது.

### நோன்பு திறப்பது

நோன்பு திறப்பதை **இ.்.ப்தார்** என்று அழைப்பார்கள். சூரியன் மறைந்த பின் **பிஸ்மில்லாஹ்** என்று கூறி, தண்ணீர் அருந்தி, மிக எளிய முறையில் சாப்பிடத் தொடங்குவார்கள் அவ்வாறு செய்தால்தான் ஒரு நோன்பு முழுமை பெறும்.

### ஈகைக் கொடுத்தல்

ஈகை என்றால் தானம் என்பது பொருள். இந்நோன்பு மாதத்தில் ஏழை எளிய மக்களுக்கு நம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும். ஈகைப் பண்பும் இரக்கச் சிந்தனையும் கொண்டு மனித நேயத்துடன் நடந்து கொள்ளுதலே இம்மாதத்தின் சிறப்பு ஆகும். இவ்வாறு தானம் செய்வதை இஸ்லாமியர்கள் **ஸகாத்** கொடுத்தல் என்பார்கள்.

### ஈகைத் திருநாள்

இம்மாதம் முழுவதும் ஈகைப் பண்போடு இருப்பதால் இந்நாள் ஈகைத் திருநாள் எனப்பட்டது. ரமலான் மாதம் முழுவதும் இறைவனுக்காக நோன்பு நோற்று, பலவகை நன்மைகளைப் பெற்ற பின் **ஷவ்வால்** மாதம் பிறை பார்த்தவுடன் கொண்டாடப்படுவது ஈகைத் திருநாள் ஆகும். இதை நோன்பு பெருநாள் என்றும் அழைப்பார்கள். இந்நாளில் அகமும் புறமும் மகிழ்ந்து, சுவையான உணவுகளை உண்டு கொண்டாடப்படுவது வழக்கம். இந்நாளில் ஒருவருக்கொருவர் **ஈத் முபாரக்** என வாழ்த்துக் கூறுவார்கள். ஈத் என்றால் கொண்டாட்டம் என்பது பொருள்.

இறையச்சத்துடன் இருந்து, எளிமையைக் கடைப்பிடித்து, பல தானங்கள் செய்து இருப்பதே இந்த ரமலானின் மகிமை ஆகும். நமக்காக இறைவனிடத்தில் இறைஞ்சி, இறைவன் நம் இறைஞ்சுதலுக்குச் செவிக்கொடுக்கும் புனிதமான நாட்கள் ஆகும். ஒவ்வொரு வருடமும் இவற்றை முறையாகச் செய்வது அனைத்து இஸ்லாமியரின் தலையாய கடமையாகும்.

**ஹ. சமீமா பானு**

**இளங்கலைத்தமிழ், மூன்றாமாண்டு**

# சொல் விளையாட்டு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தி | கூ | ல் | கை | பெ | ல் | ட | பா | ரி | ப |
| கை | ரு | பா | ம | து | ரை | க் | கா | ஞ் | சி |
| டை | தொ | மு | லை | தொ | டு | பு | த் | கை | று |
| வா | தி | ந் | ரு | பா | க | ற | ள் | தொ | பா |
| ல் | டு | நெ | று | கா | று | நா | று | த் | ணா |
| ந | ற் | றி | ணை | நூ | ற் | னூ | க | லி | ற் |
| டு | தொ | ப | று | லி | நா | று | டி | க | று |
| நெ | த் | கு | மா | க | சி | ற் | ப் | ட் | ப் |
| து | ங் | ண | ஆ | பா | த் | தி | ல் | ப | ப |
| ஐ | ந் | மு | ல் | லை | ப் | பா | ட் | டு | டை |

**கட்டங்களுக்குள் மறைந்திருக்கும் சங்க இலக்கிய நூல்களைக் கண்டறிக.**

சு. அருணிமா தேவி

இளங்கலைத்தமிழ், முதலாமாண்டு

## பொன்மொழிகள்

# அறிவியல் சிந்தனை வரிகள்

- *தொழில்நுட்பம் மனித உறவுகளை மிஞ்சும் போது இந்த உலகம் முட்டாள்களால் நிறைந்திருக்கும்.* - **ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்**
- *மரத்திலிருந்து ஆப்பிள் கீழே விழுவதைப் பலரும் பார்த்தார்கள்; ஆனால் ஏன் என்று கேட்டவர் நியூட்டன் ஒருவரே.* - **வில்லியம் ஹாஸ்விட்**
- *விறகில் தீ இருப்பதை உணர்ந்தவன் ஞானி. அதில் தீ மூட்டி உணவு சமைத்து சாப்பிட்டவன் விஞ்ஞானி.* - **இராமகிருஷ்ணர்**
- *ஒவ்வொரு வினைக்கும் அதற்குச் சமமான எதிர்வினை உண்டு.* - **ஐசக் நியூட்டன்**
- *மனித அறிவாற்றல் என்பது எவ்வளவு சிறியது என்பதைக் காட்டும் பணியைத் தான் அறிவியல் செய்துள்ளது.* - **மசானபு புகோகோ**

# கடித இலக்கியம்



## தோழிக்குக் கடிதம்

அன்புள்ள சத்யபிரியா நானும் என் குடும்பமும் நன்றாக இருக்கின்றோம். நீயும் உன் குடும்பமும் நன்றாக உள்ளீர்களா? உன் நினைப்பிலே நான் இருக்கிறேன். நாம் இருவரும் சந்தித்து எத்தனையோ நாட்கள் ஆகின்றன. ஆதலால் மிகவும் வருத்தமாக இருக்கிறது. உன்னைக் காண வேண்டுமென்று ஆவலாய் இருக்கிறேன்.

நீ, நானு, யாழினி மூவரும் பள்ளியில் படிக்கும் போது எப்படி எல்லாம் விளையாடி ஒன்றாக இருந்தோம். ஒரே வகுப்பில் படித்து, ஒன்றாகப் பேசி இருந்தோம். தோழியாக மட்டும் இல்லாமல் மூவரும் சகோதரிகளாகவும் இருந்தோம். அந்த இனிய நாட்களை எண்ணி வருந்துகிறேன்.

நீ முன்பு நம்ப ஊரில் இருந்தாய். இப்பொழுது நீ வேற ஊரில் இருக்கிறாய். திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகள் நடக்கும் போது நாம் சந்தித்துக் கொண்டோம். ஆனால் இப்பொழுது கொரோனா காலம் என்பதனால் சந்தித்துக்கொள்ள முடியவில்லை. கொரோனா மிகவும் வேகமாகப் பரவுகிறது. அதனால் நீயும் உன் குடும்பத்திலுள்ளவர்களும் பாதுகாப்புடன் இருங்கள்.

சத்தான உணவுகளைச் சாப்பிடு சத்யபிரியா. பழங்கள், காய்கறிகள், கீரைகள், முட்டை, மீன், நட்ஸ், தானிய வகை உணவுகள் போன்ற சத்தான உணவுகளைச் சாப்பிடு. அப்படி இல்லையென வேப்பிலை, மஞ்சள்தூள், கற்பூரவல்லி இலை, பச்சை கற்பூரம், கிராம்பு, துளசி இதையெல்லாம் ஒன்றாகத் தண்ணீரில் போட்டு ஆவி பிடி.

கபசுரக் குடிநீர் போன்ற கஷாயம் குடி சத்யபிரியா. வெளியே போகும் போது மறக்காமல் முகமூடி (மாஸ்க்) போட்டுக்கொண்டு போங்கள். நீ உன் உடம்பை நன்றாகப் பார்த்துக்கொள். உனக்கு எதாவது பிரச்சினை என்றால் உடனே எனக்கு போன் பண்ணு. உனக்கு நான் இருக்கிறேன். சீக்கிரம் நாம் சந்திப்போம். நாம் மூவரும் ஒன்றாக இருப்போம். நான் அந்த காலத்தை எதிர் பார்த்து இருக்கிறேன். சீக்கிரம் நம்ப ஊருக்கு வா சத்யபிரியா.

இப்படிக்கு
உன் தோழி

**மா. ஜெகதீஸ்வரி**
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

# நம் வாழ்க்கை நம் கையில்

**வணக்கம் தோழிகளே,**

ஒரு பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி அதை அடுப்பில் வைத்து, அடுப்பைப் பத்தவைத்து அதில் தவளையைப் போடுங்க. அந்தத் தண்ணீர் சூடாகும் வரைக்கும் அந்தத் தவளை ஆழமாக நீந்திக் கொண்டே இருக்கும். தண்ணீர் சிறிது சூடாக ஆரம்பிக்கும் போது அந்தத் தவளை தண்ணீரின் சூடுக்கு ஏற்றவாறு அதன் உடலின் வெப்பநிலையை மாற்றிக் கொள்ளும். அப்போ தண்ணீர் அடுத்த நிலைக்கு வந்து, கொதிநிலை மாறும், அதிகமாகும். அப்போது சூடு தாங்க முடியாமல் அந்தத் தண்ணீரில் இருந்து தவளை, தாவி குதித்து வெளியே செல்ல முயற்சி செய்யும்.

ஆனால் அந்தத் தவளையால் முடியாது. ஏனென்றால் அவ்வளவு நேரம் அந்த தண்ணீரின் வெப்பத்திற்கு ஏற்றவாறு தன் உடலின் வெப்பநிலையை மாற்றி, மாறி மாறி அது தன் கட்டுபாட்டில் இருந்தது. தன் நிலைமையை அறிந்து வெளியே குதிக்க முற்படவே இல்லை. அந்த முயற்சியில் தன்னுடைய சக்தியை இழந்து விடுகிறது. எப்போ நிலைமை கைமீறிப் போகுதோ அப்போ அது வெளியே குதிக்க முயற்சிக்கும்போது அதனால் முடியாமல் இறந்து போயிடுது.

அதே போலதான் நாமும் நம்முடைய வாழ்க்கையில் மனதையும் உடலையும் நினைப்பையும் நம்முடைய கட்டுப்பாட்டிலே வைத்துக்கொள்ள வேண்டும். எப்போ நம்ம சுத்தியிருக்கிற சூழ்நிலைகளோ, பிரச்சினைகளோ, மத்த மனிதர்களோ நம்ம கட்டுபடுத்த நினைக்கிறார்களோ, அப்பவே நாம் அதிலிருந்து சுதார்ச்சிக்க வேணும்.

நாம் அவர்களின் கட்டுபாட்டுக்குள்ளே போக கூடாது. நம் நிலைமையை அறிந்து நம்முடையக் கட்டுப்பாட்டுக்குள்ளே இருக்க வேண்டும். நிலைமை கைமீறிப் போனா இழப்புத்தான் நேரிடும். நாம நம்முடைய நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்திருந்தால் அப்போதுதான் நம்மைச் சுத்தியிருக்கிற பிரச்சினைகள், சூழ்நிலைகள், மனிதர்கள் போன்றோரை விட்டுக்குடுத்து போகலாமா அல்லது தட்டிக்கொடுத்துப் போகலாமா என்பது தெளிவடையும். நிலைமையை எப்படி சமாளிக்க முடியும் என்ற தெளிவுடன் தன்னம்பிக்கையும் வரும்.

தோழிகளே நம்முடைய வாழ்க்கையில் நாம் எப்போ அந்தப் பாத்திரத்தில் இருந்து வெளியே குதிக்கலானு தெரிந்துவிடும். அதனால் நம் வாழ்க்கையை அழகாக வாழ முடியும். எதுவும் நம்மோட கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வரைக்கும் நம் வாழ்க்கை நம் கையில்தான்.

**வி. இரட்சண்யா**
முதுகலைத்தமிழ், இரண்டாமாண்டு

# விட்டுக்கொடுத்தோர் கெட்டுப்போவதில்லை......

சிறுகதை

துரைகண்ணன் என்பவருக்கு மூன்று குழந்தைகள்.

பொன்னன், பூமதி, தேன்மதி. சில காலங்கள் கடந்தபின், துரைகண்ணன் (தந்தை) இறந்துவிடுகின்றார். மூத்த மகனுக்குக் குடும்பப் பொறுப்பை ஏற்று, நடத்த வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது.

தந்தை இம்மூவருக்கும் தனித்தனி நிலங்களைப் பங்கிட்டுக் கொடுத்து இருந்தார். பொன்னன் நல்ல உழைப்பாளி. மூவரின் நிலங்களில் பயிர் வைத்து, மண்ணைப் பொன்னாக மாற்றி, குடும்பத்தின் வருவாய்க்கும் வசதிவாய்ப்புக்கும் வழி செய்தான்.

தங்கை இருவருக்கும், அவர்களின் நிலங்களை விற்று திருமணம் செய்து வைத்து, கொஞ்சம் பணமும் கொடுத்து அனுப்பி வைத்தான்.

பூமதிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் இரு கால்களிலும் குறைபாடாகவே பிறந்தது. தேன்மதிக்கு குழந்தைகள் இல்லை. கணவரும் பெரியதாகச் சம்பாதிக்கவுமில்லை. பல வருடங்கள் கடந்தன.

பொன்னனுக்குத் துணை அந்த நிலம் மட்டும்தான். அதில் வரும் வருமானத்தைத் தங்கைகளுக்கும் தந்து வந்தான்.

தங்கைகள் இருவரும் ஒருநாள் பொன்னனிடம், உன்னுடைய நிலத்தை எங்களுக்காக விட்டுக்கொடுத்தால், அதைக் கொண்டு வருமானம் ஈட்டி வாழ்ந்துவிடுவோம் என்றார்கள்.

தன் வாழ்நாளில் தனக்கென்று எதையும் சுயநலமாக வைத்துகொள்ளாத பொன்னன், தங்கைகள் மீது கொண்ட பாசத்தால், சரி என்று ஒப்புக்கொண்டான். பாசம் தன் வஞ்சனையால் அறிவைச் சிறை வைத்தது.

சுயநலம் சுகமான வாழ்க்கையை அவர்களுக்குத் தந்தது. ஆனால் பொன்னன் கூலித் தொழிலாளியாக தன் நிலத்திலேயே ஒரு சிறுகுடிசை போட்டு வாழ்ந்தான்.

கால ஓட்டத்தில் நான்கு பத்தைக் கடந்து இருந்தான் பொன்னன். அவன் மீது அக்கறை காட்ட யாருக்கும் மனமில்லை. ஊரில் தங்கராசு என்பவரின் மூலம் ஒரு வரன் வந்தது. பக்கத்து ஊர். பெண் பார்க்க குடும்பமே சென்றது. பார்த்ததில் அனைவருக்கும் பிடித்துப்போக, பெண்ணின் தகப்பனார், பொன்னனைப் பற்றி கேட்க, ராசு உள்ளதைக் கூற, தயக்கதுடன் மௌனம் காத்தார் ராஜரத்தினம். எனக்குப் பெண் கொடுக்க சம்மதம், ஆனால் ஒரு நிபந்தனை....

எல்லோரும் அவரின் வாயை, அசராமல் பார்த்துக் கொண்டிருந்தனர். என் பொண்ணும் நல்லா இருக்கனுமுன்னு எனக்கும் ஆசை இருக்கும்ல. அதனால ஒரு சின்ன விவசாயம் செய்யற இடம் சொந்தமா இருந்தா, அத வச்சு பொழச்சுப்பாங்கல. என் பொண்ணுக்கு நல்லா விவசாயம் தெரியும். அதனால நீங்கதான் முடிவ சொல்லனும் என்றார். அங்கே மௌனம் மட்டுமே தன்

பணியைச் செய்தது. விடைபெற்ற போது, கயல்விழி பொன்னனைப் பார்த்து சிரித்தாள். அதில் பல அர்த்தங்கள் இருக்கதான் செய்தது.

வழியில் பூமதி சொன்னாள், அவரு கேட்டதுக்காக, அந்த நிலத்த கேட்டுடாதே அண்ணா. நானே நொண்டிப்புள்ளைய வெச்சுகிட்டு கஷ்டபடுகிறேன் என்றாள்.

தேன்மதியோ ஒருபடி மேல போய், நாங்க வாழனுமா வேண்டாமன்னு நீயே முடிவு பண்ணிக்கோனா என்றாள்.

அக்கறை அங்கே ஆட்டம்கண்டது. எதுவும் பேசாமல் அமைதியா வந்தானே தவிர, அவர்களிடம் கோபம்கொள்ளவில்லை.

பொன்னன் தன்நிலையை எண்ணி கவலையுற்றான். சோர்வுடனே இருந்தான். மறுதினம் வேலைக்கும் செல்லவில்லை. இப்படியே ஒருவாரம் கடந்து போனது. ஒரு நாள் வயலிலே மெல்ல நடந்தான், அவன் கால்கள் மேற்கு திசையை நோக்கிப் பயணித்தன. காரணம் மனதுக்கு அமைதி தேவைபட்டது. மலையின் அடிவாரத்தை அடைந்தான்.

அங்கே ஒரு துறவி இருப்பதும், அவரைக் காண ஊர்மக்கள் சென்று வருவதும், நினைவிற்கு எட்டியது. குடிலை நோக்கி சென்றான். துறவியோ செடிகளைப் பராமரித்துக்கொண்டிருந்தார்.

பொன்னனைக் கண்டதும் அவரே அழைத்தார். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்களே, அங்கே பொன்னனின் முகவாட்டத்தைத் துறவி புரிந்துகொண்டார். ஏதோ மனகவலை என்று.

தான் யார் என்ற முழு விவரத்தையும் கூறினான். மௌனமாக இருந்தாரேயன்றி பதில் ஏதும் கூறவில்லை. பழங்களைக் கொடுத்து, இதைச் சாப்பிடு. அமைதியாக இரு. நீ சென்று நாளை வா என்றார். பொன்னன் எதையும் ஏற்கும் மனநிலையில் இல்லை என்பதால் இந்த முடிவு எடுத்தார் துறவி.

பொன்னன் வீடு திரும்பி கொண்டிருந்தான்.

வழியில் ராசுவைப் பார்த்தான்.

எங்கே பொன்னா இந்த பக்கம் என்றான்.

என்ன முடிவு பண்ணியிருக்க. நல்ல பொண்ணுபா. நீ கட்டிகிட்டா முன்னமாதிரி ஜம்முன்னு வாழலாம். இந்தக் கஷ்டமெல்லாம் எதுக்குபா. யோசிச்சு முடிவ சொல்லுபா. நாளைக்கு அந்த ஊருக்குப் போற வேல இருக்கு. நீ சொல்லிட்டா நான் தெரியப்படுத்திடுவேன்.

நம்ம துறவிய பத்தி சொன்னேன், இவரு பாக்கனுமுன்னு சொன்னாரு. அதான் போய்கிட்டு இருக்கேன் என்றார்.

குடிலை அடைந்தார்கள். அதற்கு முன் பொன்னனைப் பற்றிய கதையைச் சொல்லி புலம்பிகொண்டே போனான். ராசு வருவதைக் கவனித்த துறவி ஏதோ புலம்பிகொண்டு வருவதையும் கவனித்தார்.

வா பா என்றார். ராசுவை நன்கு அறிந்தவர். பழங்களைக் கொடுத்தான். இவரின் மனகுறைக்குத் தாங்கள் ஒரு தீர்வு கூற வேண்டும் என்றான். அது இருக்கட்டும் நீ என்ன மனகுறையோடு புலம்பிக்கொண்டு வந்தாய் என்றார்.

எல்லாம் பொன்னனைப் பற்றிய கவலைதான், அவங்க அப்பா போலவே எவ்வளவோ நல்ல காரியம் இந்த ஊருக்குச் செய்தவன், நிறைய குடும்பங்கள அவங்க அப்பா வாழ வச்சாரு, எங்க குடும்பத்துக்குக்கூட பணமும் பொருளும் கொடுத்து உதவி இருக்காரு. ஆனா அவங்களுடைய போதாதகாலம் இப்ப ரொம்ப கஷ்டபடுறான், ஆனா தங்கமான குணம் கொண்டவன், கூட பொறந்தவங்களே அவன ஏமாத்துறாங்க சாமி, என்று நடந்தவைகளைக் கூறினான் ராசு. துறவியின் அமைதி எதையோ யோசிப்பதை உணர்த்தியது.

அப்படியென்றால் ஓர் உபகாரியம் செய். நீ பெண்ணின் தந்தையை என்னிடம் அழைத்து வா என்று சொன்னார். உடன்வந்தவரின் பிரச்சினைக்கும் தீர்வைக் கூறினார்.

பொன்னனுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். சரி பார்ப்போம், பெண்வீட்டாரின் கருத்தையும் அறிந்துகொண்டு ஒரு முடிவை எடுப்போம்.

மறுதினம் ரத்தினமும் ராசுவும் குடிலை அடைவதற்கு முன்னர், பொன்னன் நம்மை வர சொன்னாரே, ஆனால் எதுவும் பேசவில்லை. காத்திருக்கமட்டும் சொல்லிவிட்டு, இவர் ஏதோ எழுதிய வண்ணம் இருக்கிறாரே. இடையில் பொன்னனைப் பார்ப்பதும் மீண்டும் எழுதுவதுமாக இருந்தார்.

இதற்கிடையில் இருவரும் வந்து சேர்ந்தார்கள். மூவரும் அதிர்ச்சி ஆனார்கள். நீயும் துறவியைப் பார்க்க வந்தாயா பொன்னா என்றான் ராசு.

ஆமாம்... ஆமாம்...

இவர் எப்படி இங்கே என்றான். அவர் தான் அழைத்துவர சொன்னார். உன் காரியமாக.

என் காரியமாகவா.

இங்கே என்னதான் நடக்கிறது என்பது புரியாமலும் புதிராகவும் இருந்தது.

துறவி ரத்தினத்தைப் பார்த்து, உங்களுக்குப் பொன்னனைப் பிடித்து உள்ளதா?

ஆமாம்.

நிலமில்லையென்றால்.........பெண்தர மாட்டீர்களா? என்றார்.

யாரை நம்பி என் பொண்ணைத் தருவது. பெரியவங்க இருந்தாலும் பரவாயில்லை. தங்கைகளும் இவரை நம்பி வாழராங்க. அதனால தான் ....

பிழைக்கனுமுள்ள ஐயா. நில இருந்தா பொழச்சிக்குவாங்க. அதற்காகத்தான் இந்த நிபந்தனைய சொன்னேன்.

சரிதான் உங்கள் கருத்து நியாயமானதாக உள்ளது. சரி என்மீது நம்பிக்கை வைத்து பெண் தாருங்கள். பொன்னனுக்குத் தந்தை ஸ்தானத்தில் இருந்து பெண்கேட்கிறேன் என்றார்.

துறவியின் அன்பு, பொன்னனுக்கு ஒருகணம் தன் தந்தையைக் கண் முன்னே காட்டியது.

உங்களுக்கு நம்பிக்கை எழவில்லையென்றால், இந்த இடத்தை இப்பொழுதே உரிமையாக்கி தருகின்றேன் என்றார். மேலும் மணமுடித்த பின் இங்கேயே அவர்கள் இருக்கட்டும்.

அடுத்தடுத்த அதிரடி முடிவுகளைச் சொன்னவுடன் மூவரும், செய்வதறியாது முழித்துக் கொண்டிருந்தனர்.

பொன்னன் துறவியின் கால்களில் கண்ணீருடன் தஞ்சமடைந்தான். மகனே உன் நலன்கருதியே இந்த முடிவை எடுத்துள்ளேன் என்றார்.

நீ செய்த நற்காரியங்களுக்கு முன்னால் இது ஒன்றும் பெரிதல்ல என்றார்.

சில நாட்கள் சென்றபின் மணமுடிந்து, துறவியின் இடத்தில், ஒரு வீடு அமைத்து வாழ்ந்தனர்.

துறவியைக் கவனித்து கொள்வதும், தோட்டத்தில் பயிர்களைப் பராமரிப்பதுமாக நாட்கள் நகர்ந்தன.

நெல் பயிரிட்டு இருந்தார்கள். காலம் இரண்டைக் கடந்தது.

இருவரும் சுகமாகவே வாழ்ந்து வந்தார்கள். பொன்னன், கயல்விழியை அழைத்தார் துறவி.

என் இறுதி காலம் நெருங்குகிறது. ஆதலால் ஆன்மீகத் தலங்களுக்குச் செல்ல விரும்புகிறேன். நீங்கள் இங்கேயே சுகமாக வாழவேண்டும். என் ஆசீர்வாதம் எப்பொழுதும் உங்களுக்கு இருக்கும்.

திடீர் என்று இப்படி கூறினால், உங்களைப் பிரிந்து, எப்படி நாங்கள் இருப்போம். மனம் கலங்காதே. ஒவ்வொருவரும் அன்பாகப் பழகியும் விட்டுகொடுத்தும் போனால், இன்பமாக வாழலாம். அவர்களுக்கு யாரிடமிருந்தாவது நன்மை வந்து சேரும் என்றார்.

ஒரு மரபெட்டியைக் கொடுத்தார்.

எங்களுக்கு எதற்கு ஐயா இதுயெல்லாம்.

இது என் அன்பு பரிசு. உங்களுக்குத்தான் சேரவேண்டும். அது நியாயமும் கூட என்றார்.

கொடுத்து பின் இருவரும் ஆசீர்வாதம் பெற்றனர். சீக்கிரமே ஒரு வாரிசு இவ்வுலகைக் காணட்டும் என்றார்.

அவரின் பயணமும் தொடங்கியது. ஈர விழிகளுடன் இருவரும் வழியனுப்பினர்.

இதற்கு ஒருவருடம் முன்னால், தங்கைகள் நிலத்தை விற்றுத்தரும்படி அண்ணனை நாடினார்கள்.

தந்தையின் நினைவாக இருப்பது இது ஒன்றுதான், இதையும் விற்றுவிட்டால், பணம் உள்ளவரை இவர்கள் நலமாக இருப்பார்கள். பின்நாட்களில்???

குழப்பத்தில் இருக்கையில், கயல்விழி ஏன் நிலத்தை விற்க வேண்டும், அதற்குப் பதிலாக, பாதி பாதி பங்குல, மூனு வருஷத்துக்குக் குத்தகைக்கு விடலாம். பொருளும் கிடைக்கும், பணமும் கிடைக்கும்ல.

இந்த யோசனை படி செய்தான். தன் பங்கு வருமானத்தையும் அவர்களுக்கே விட்டு கொடுக்கச்சொன்னாள் கயல். இதையெல்லாம் மனதில் வைத்தே துறவி ஒருமுடிவை ஏற்கனவே எடுத்து இருந்தார்.

தினம்தினம் துறவியின் குடிலில் விளக்கை ஏற்றி வழிபட்டு வந்தார்கள். மரப்பெட்டியும் அருகில் இருந்தது. அவரும் வந்துவிட வேண்டுமென்ற ஆசை நாளுக்குநாள் அதிகமானதே தவிர, அவர் மட்டும் வரவேயில்லை. நாட்கள் கடந்து மறுவருடம் அவர் சென்ற தினம் வந்தது. அவர் ஆசீர்வதித்த மாதிரியே ஆண் குழந்தை பிறந்திருந்தது. அவரை எண்ணி வழிபட்ட பின்னர், மரப்பெட்டியைத் திறந்து பார்த்தார்கள்.

அதில் இரண்டு தாள்கள் இருந்தது. ஒன்றில் ...

பொன்னனே இந்த நிலத்திற்கான உரிமையாளர் என்று, துறவி எழுதிய மெய்தன்மை இருந்தது.

மற்றொன்றில்.... என் மக்களே...

பொன்னா, இவ்வுலகில் யாரையும் நம்மால் திருப்திபடுத்த இயலாது. இறைவனால் மட்டுமே அது இயலும். பேராசையும், சுயநலமும் கொண்ட மனித கூட்டத்தின் சுயரூபத்தை நீ அறிந்து கொள்ள முயற்சி செய்தால், உன்வாழ்விற்கு நல்லது. இதை என் அன்பு கட்டளையாக ஏற்பாயாக.

மேலும், இந்த இடம் உங்களின் வம்சத்துக்கே சொந்தமாக்கி உள்ளேன். உலகபற்று அற்றவனுக்கு, உற்ற துணையாக இருந்த உங்களுக்கு, எதையாவது விட்டுக்கொடுத்தால்தானே என் நன்றிகடன் தீரும். நான் இறைவனின் திருபாதங்களைப் பற்ற விரும்புகின்றேன். திரும்பி வர எண்ணமில்லை. நலமும் வளங்களும் பெற்று மகிழ்ந்து, மற்றவர்களையும் மகிழ்விற்று வாழுங்கள்.

திருமதி க. ஆனந்தி
முதுகலைத்தமிழ், முதலாமாண்டு

# தூரிகைத் தூறல்கள்




கே. சங்கீதா
இளங்கலைத்தமிழ், இரண்டாமாண்டு

மு. லாவண்யா
நிர்வாகவியல், முதலாமாண்டு



## சொல் விளையாட்டு - விடைகள்

1. திருமுருகாற்றுப்படை
2. முல்லைப்பாட்டு
3. பரிபாடல்
4. நற்றிணை
5. ஐங்குறுநூறு
6. சிறுபாணாற்றுப்படை
7. புறநானூறு
8. கலித்தொகை
9. மதுரைக்காஞ்சி
10. அகநானூறு



மு. திரிஷா
வணிகவியல், முதலாமாண்டு



பா. கீர்த்தனா
வணிகவியல், இரண்டாமாண்டு

---

## விடுகதை - விடைகள்

1. அகப்பை
2. ஆட்டுக்கல்
3. மத்து
4. படி
5. வளையல்
6. கம்பு
7. சோளம்
8. தேங்காய்
9. பணியாரம்
10. முருங்கை

# தகவல் களஞ்சியம்

- பாலுட்டிகளில் மிகப் பெரிய கண்கள் நீலத் திமிங்கலத்துக்குதான் உண்டு.
- மீன் இனங்களில் அதிக ஆண்டுகள் வாழ்வது ஸ்டர்ஜியன் எனும் இனம்.
- இந்தியாவில் காணப்படும் ஒரே வகை மனிதக் குரங்கு கிப்பன்.
- மலைப்பாம்புக்கு விஷம் இல்லை.
- திமிங்கலத்தின் மூளையின் எடை 250 பவுண்டு.
- கெண்டை மீனின் ஆயுள் 50 ஆண்டுகள்.
- ஒட்டகம் 10 நிமிடத்தில் 30 காலன் தண்ணீர் குடித்து விடும்.
- உலகிலேயே மிகப் பெரிய, மிக உயராமான பறவை நெருப்புக்கோழி.
- பூனைகளுக்கு இனிப்பான உணவுப் பொருட்களைக் கண்டால் அலர்ஜி.
- தேளுக்குக் காதுகள் இல்லை.
- சுறாமீனுக்குப் புற்றுநோய் உட்பட எந்த நோயும் வராது.
- வெட்டுகிளிகளுக்கு அதன் காதுகள் காலில் உள்ளன.
- சிலந்தி ஒரே சமயத்தில் 600 முட்டைகள் இடும்.
- ஈமு பறவை விவசாயிகளின் எதிரி என்றழைக்கப்படுகிறது.
- கூட்டுக்கு வெளியே வாழும் உயிரினம் தேனீ.
- நீர் அருந்தாத ஜீவராசி பல்லி.
- நத்தையின் வாயில் மொத்தம் 135 பல் வரிசைகள் உள்ளன.
- பெண் யானைக்கு மதம் பிடிக்காது.

ஞ.ர. கிருத்திகா

உயிர் வேதியியல், இரண்டாமாண்டு

# முன்னாள் முத்துகள்

(சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் முன்னாள் மாணவியரின் படைப்பாக்கங்கள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன)

# சோகா நந்தவனத்தின் நினைவலைகள்



வி.சி. சித்ரா
உதவிப் பேராசிரியர்,
சென்னை தேசிய கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, ஆவடி, சென்னை.
(2013 முதல் 2018 வரை பயின்றவர்)

அன்பு என்னும் சோலையில்
பண்பாய்ப் பாடி மகிழ்ந்தோம்..........
ஆயிரம் பேர் இருந்த இடத்திலும்
அமைதியாய் வாழ்ந்தோம்...........
இமை அசைக்கும் நேரத்திலும்
சில்லறையாய் சிரிப்புச் சத்தம்..........
ஈராயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும்
இப்படி ஒரு வாழ்க்கை கிடைக்குமா?
உள்ளம் விட்டுக்கொடுத்து
இன்பமாய் வாழ்ந்த நாட்கள்..........
ஊடல் வந்தாலும் சில பொழுதில்
சூரியனைக் கண்ட பனியாய்
மறையும்...........
என்னவென்று சொல்லுவேன் என்
இனிய நெஞ்சங்களைப் பற்றி...........
ஏக்கத்தைப் போக்கிய என் அன்பான
இதயங்களை நினைத்தாலே என்றும்
மகிழ்ச்சி........
பாடத்தில் ஐயம் என்று கேட்டால்
அதனைத் தீர்க்க ஐம்பது பேர்.........
ஒரு நொடி பொழுது காய்ச்சல் என்றாலும்
பலநொடிகள் கவனிக்கும் சகோதரிகள்.........
ஓரிடத்தில் இணைந்து ஒருயிராய்
அன்பில் திளைத்த என் தோழிகள்.........
ஔடதமாய், அன்னையாய், அன்பில்
அரவணைத்த என் இல்லத்தின் (விடுதியின்)
நாட்கள் இப்படியாய்.........
கல்விக்கண்ணைத் திறந்த
நீரூற்று என் கல்லூரி.........
இந்நந்தவனத்தில் மலர்ந்த என்னை
ஆசிரியராய் மணம் வீச செய்த
கல்விக்கடல்,,,,

**நீங்கா நினைவலைகளுடன்.........**
**நித்தம் பயணம்.........**

# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் பௌத்தம்



பா. தீபா
உதவிப்பேராசிரியர்
நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஆவடி, சென்னை
(2013 முதல் 2016 வரை பயின்றவர்)

## முன்னுரை

பௌத்தம் தனது நெடிய பயணத்தில் தமிழரின் தத்துவங்களோடு இணைந்து தமிழ்ப்பண்பாட்டைப் புரிந்து கொள்ள உதவுகிறது என்பதைத் தற்கால இலக்கியங்கள் வழியாகக் காணலாம்.

19ஆம் நூற்றாண்டில் வள்ளலாரால் தொடங்கப்பட்ட சன்மார்க்க இயக்கத்தில் பௌத்தம் தொடர்பான கருத்துகளைச் சில அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். முதன்முதலில் இரத்தின வெங்கடேசன் என்பவர் எழுதிய “மணிமேகலையும் உயிர் தர்மமும்” என்ற நூலைத் தொடர்ந்து பல கட்டுரைகள் இது குறித்து வெளிவந்துள்ளது. இவை ஒரு பக்கம் இருப்பினும் ஆய்வாளர்கள் பாரதியார் காலம் தொடங்கி தமிழ்க் கவிதையின் மறுமலர்ச்சியை மதிப்பீடு செய்து நான்கு கால கட்டமாகப் பிரித்து, பாகுபடுத்தியுள்ளார்கள்.

20ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் முதல் காலக் கட்டமாக பாரதியார், பாரதிதாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதியார், முருகேச பாகவதர், இ.நா. அய்யாக்கண்ணு புலவர் போன்றவர்களின் காலக்கட்டத்தில் வெளிவந்த படைப்புகள் பலவும் தனிக்கவிதைகளாகப் பௌத்தத்தைப் பதிவு செய்துள்ளன.

## பாரதியார்

புத்தர் பெருமாள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நமது திருநாட்டில் தோன்றினார் என்பதை பாரதியார் பாடல் வழி,

**பூரண ஞானம் பொலிந்தநன் னாடு**
**புத்தர் பிரானருள் பொங்கிய நாடு**
**பாரத நாடு பழம்பெரும் நாடே**

அறியமுடிகிறது. **ஆரிய தரிசனம்** என்ற கவிதையில்,

**கனவென்ன கனவே - என்றன்**
**கண்துயி லாது நனவினிலே யுற்ற**

எனத் தொடங்கும் பாடலில்,

**புத்த பகவன் – எங்கள்**
**புத்த பகவன் – அவன்**
**சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்முகங் கண்டேன்**

என்று புத்தபிரான் பற்றிப் புகழ்ந்து பாடுகிறார். இந்தியாவின் சிறப்பு, செழிப்பு, ஞானம் பற்றிப் பேசும் இடங்களில் எல்லாம் புத்தரைப் பற்றியும் பேசியுள்ளார். பாரதியாரால் மொழிபெயர்க்கப்பட்ட பகவத்கீதையின் முன்னுரையில் பௌத்தத்திற்கும் வைதீகத்தற்கும் இடையேயான முரண்பாடுகள் பற்றி விளக்கியுள்ளார்.

பௌத்த மறுமலர்ச்சி, கல்வி மறுமலர்ச்சி அடிதள மக்களின் எழுச்சி இவற்றின் முன்னேற்றத்திற்காகத் தம் வாழ்நாளில் பெரும் பகுதியை இவ்வியக்கத்திற்காக அர்ப்பணித்தவர்கள் பண்டித அயோத்திதாசன், கர்னல் ஆல்காட், அனகாரிகா தம்மபாலா, பேராசிரியர் லட்சமிநரசு, தோழர் சிங்காரவேலர் போன்றோரின் காலத்தில் வாழ்ந்த பாரதியின் படைப்புகளில் இவர்களுடைய சாயல் வெளிப்படுகிறது.

## பாரதிதாசன்

சுயமரியாதை இயக்கத்தின் பாவலரான பாரதிதாசன், **“மணிமேகலை வெண்பா”** என்ற தனிக்கவிதை நூலைப் படைத்துள்ளார். பெரும் அரசியல் தலைவர்களும் அறிஞர்களுமான பெரியார், அறிஞர் அண்ணா, பா.ஜீவானந்தம் இவர்களின் காலத்தில் வாழ்ந்த பாரதிதாசன், கவிதைத் துறையில் தமிழின மீட்சியை மிக ஆழமாக

முன்னெடுத்துள்ளார். பௌத்த விழுமியங்களான பகுத்தறிவு, அன்பு, சமத்துவம் ஆகிய கருத்துகள் மிகவும் ஈர்ப்புடையதாய் இருந்ததை அவரின் படைப்புகளான கவிதைகளிலும் உரைநடையிலும் காண முடிகிறது. புத்தரின் கருத்துகள் மிகவும் புகழ் பெற்றவை. அவற்றையொட்டி பாரதிதாசன் " புத்தர் புகன்றார்", "புத்தர் புகன்றார் இல்லை" என்ற பொருண்மைகளில் இரண்டு கவிதைகளை எழுதியுள்ளார்.

### கவிமணி தேசிக விநாயக பிள்ளை

எட்வின் அர்னால்டின் (Light of Asia) எனும் நூலைத் தழுவி 1941இல் ஆசிய ஜோதி என்ற நூல் வெளிவந்தது. இந்நூல் கவிமணியின் மகத்தான படைப்பு. இன்றளவிலும் தமிழுலகில் பெரும் புகழ் பெற்ற படைப்பாகத் திகழ்கிறது. இவர் படைப்புகளில் பெரும் பகுதிகளில் பௌத்தம் இடம்பெற்றுள்ளது.

கருணைக்கடல் என்ற ஆசிய ஜோதி பாடலில் நாடெங்கும் உயிர் கொலையை நிறுத்திய வரலாறு பற்றிக் கூறியுள்ளார்.

**உலகம் புகழ் பெரியோன் - இந்த**
**உரையினைக் கேட்டு அந்நாள்**
**அலகில் கருணையினால் - சொன்ன**
**அமுத மொழி இதுவாம்...**

என்று பாடியுள்ளார்.

**சிற்றூர்ச் செல்வம்** என்ற கவிதையின் ஒரு பகுதியில் அரச மரத்தைப் பார்த்த கலைஞருக்குத் தோன்றும் உணர்வுகளின் வெளிப்பாடு,

**ஆசிய ஒளியாய்த் தோன்றி**
**அகிலமா உலகுக் கெல்லாம்**
**மாசிலா அறமாந் தூய**
**வழியினைக் காண; நல்ல**

வாசமார் தவமே ஆற்ற
வாய்மை சேர் புத்தர் கண்ட
தேசுயர் அரசன் றன்னைக்
கண்டதும் சிலிர்த்த துள்ளம்

அடித்தட்டு மக்களின் விடுதலையை ஆற்றலோடு தம் கவிதைகளில் வெளிப்படுத்தியவர். பண்டித அயோத்திதாசரின் புகழ்பெற்ற பாடல்களிலும் மற்றும் பல கவிதைகளிலும் புத்தர் கருத்துக்களைக் கூறியுள்ளார்.

## முடிவுரை

ஆற்றல் மிக்க படைப்பாளர்கள் தமிழுக்குத் தொண்டு செய்ய அணி சேர்ந்துள்ளனர். சமத்துவத்தையும் அன்பையும் வலியுறுத்தும் பௌத்தத்தை அறிஞர்கள், கவிஞர்கள் தங்கள் படைப்புகளின் மூலம் வெளிப்படுத்துகின்றனர். பௌத்த பணியானது வரும் காலங்களில் இன்னும் பெருகிவரும் என்பதில் எவ்வித மாற்றமும் இல்லை என்பது உறுதிப்படுகிறது.

பாரதியார் காலத்தில் தொடங்கிய தமிழ்க் கவிதை மறுமலர்ச்சியில் பௌத்தம் தனக்கான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டு இன்றும் தற்கால இலக்கியங்களில் உலவிக் கொண்டுக்கிறது. பாரதியாரின் படைப்புகளில், இந்தியாவின் சிறப்பு, செழிப்பு, ஞானம், பற்றிப் பேசும் இடங்களில் எல்லாம் புத்தரைப் பற்றியும் பேசுகிறார்.

புத்தரின் கருத்துக்கள் மிகவும் புகழ் பெற்றவை, ஆழமானவை, உலகிற்கு நல்லறத்தைப் போதிக்க வந்தவை என்பதை பாரதிதாசன் **புத்தர் புகன்றார்** எனும் கவிதையின் மூலம் எடுத்துக்காட்டுகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைகளில் பௌத்தத்தின் அடுத்தக்கட்ட வளர்ச்சி நிலையினைக் காண முடிகிறது .......!



முன் பக்க அட்டை ஓவியம்

மு. திரிஷா, வணிகவியல், முதலாமாண்டு

பின் பக்க அட்டை ஓவியம்

சா. பத்மபிரியா, கணினிப்பயன்பாட்டியல், முதலாமாண்டு


நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய மின்னிதழ்

தமிழ்த்துறை – சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம், சென்னை 600 099.

தமிழ்த்துறை - சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

நற்றமிழ்க்குடில்